பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 27 வெள்ளிக் கிழமை 11.04.2025 கதிர் 154

## இனி இது ரகசியம் அல்ல!

உள்ளாட்சித் தேர்தல்கள், நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் குறித்த கொழும்பில் பத்திரிகையாளர் ஒருவருடன்பேசிக்கொண்டிருந்தேன். நீதிமன்ற வழக்குகள் ☞ 2

### இஸ்ரேலுக்கு எதிராக சுவரொட்டி ஒட்டியதற்காக

# குற்றச்சாட்டு எதுவுமின்றியே இளைஞருக்குத் தண்டனை

இஸ்ரேலுக்கு எதிராக ஸ்டிகர் ஒட்டியமைக்காக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தற்போது பிணையில் விடுதலையாகி இருக்கும் இளைஞனுக்கு எதிராக எந்த குற்றச்சாட்டும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பயங்கரவாத தடுப்பு பிரிவுக்கு வந்து கையொப்பமிட வேண்டுமென பணித்துள்ளதன் மூலம் எந்த குற்றச்சாட்டும் இல்லாமல் அவர் தண்டனைஅனுபவித்துவருகிறார்என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்முஜிபுர்ரஹ்மான்தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பட்டலந்த வதைமுகாம் குறித்த அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிப்பதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு, இஸ்ரேலுக்கு எதிராக ஸ்டிகர் ஒட்டியமைக்காக 22 வயது இளைஞனை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து 90 நாட்கள்தடுத்துவைக்கஉத்தரவிட்டிருந்தது.

ஆனால் சர்வதேச ரீதியில் வந்த அழுத்தம் மற்றும் ஆளும்தரப்புக்கு வாக்களித்தவர்களின் கோரிக்கை காரணமாகப் பின்னர் அந்த இளைஞர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ரமழான் மாதத்தில் இஸ்ரேல் இராணுவம் 200 குழந்தைகளைக் கொலை செய்த மன வேதனையிலே குறித்த இளைஞன் ஸ்டிகர் மூலம் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தார். அதனாலேயே அவரைக் கைதுசெய்து 90நாட்கள்தடுத்துவைத்தார்கள். ☞ 8

# புத்தாண்டு காலத்தில் பேருந்து ஆசனப் பதிவு இடைநிறுத்தம்

சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் பயணிகளுக்காக ஆசனங்களை முன்பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 21ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பஸ் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மார்க்கத்தில் பஸ்கள் தொடர்ச்சியாக பயணிக்க வேண்டியதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ☞ 2

# முடிந்தால் ரணில், மகிந்தவைக் கைதுசெய்யுங்கள் பார்க்கலாம்

### புதிய ஜனநாயக முன்னணி எம்.பி. சவால்

முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோரை முடியுமால் கைதுசெய்து பாருங்கள் என புதிய ஜனநாயக முன்னணியின்நாடாளுமன்றஉறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுஇடம்பெற்ற பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் ☞ 8

### பட்டலந்த அறிக்கை தொடர்பில்

# சர்வதேச உதவி பெற்றேனும் ரணில் மீது சட்ட நடவடிக்கை

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட பொறுப்பானவர்களுக்கு எதிராக சர்வதேச ஆதரவைப் பெற்றேனும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் ☞ 2

# சுனாமி, கொரோனாவை போன்ற பொருளாதாரப் பேரிடர் அமெ. வரி

### சர்வகட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு



இலங்கை மீது விதிக்கப்பட்ட அமெரிக்க வரி சுனாமிப் பேரழிவு மற்றும் கோவிட்-19 பெருந்தொற்று ஆகியற்றைப் போன்று, பொருளாதார அடிப்படையில்ஏற்பட்டுள்ளஒருதேசிய பேரிடர்,அதைஒருதேசியஅணுகுமுறை மூலமே கையாளவேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று அரசியல் கட்சி பிரதிநிதிகளிடம் தெரிவித்திருக்கிறார்.

இந்த வரி விதிபபு ''எதிர்பாராதது மற்றும்தயாராகஇல்லாதது'' என்றும் அவர் கூறியிருக்கிறார். ☞ 2

# சீனப் பொருட்களுக்கு அமெரிக்க வரி 145%

### வெள்ளை மாளிகை தெளிவுபடுத்தல்

சீனப் பொருட்களுக்கு அமெரிக்கா விதித்த மொத்தவரிவிகிதம்145 சதவீதஎன்றுவெள்ளை மாளிகை தெளிவுபடுத்தியுள்ளது.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குஅமெரிக்கஜனாதிபதிடொனால்ட் டிரம்ப் புதன்கிழமை விதித்த 125 சதவீத வரி குறித்து விசேட விளக்கத்தை அளிக்கும்போதே இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சீனப் பொருட்களுக்கு முன்னர் இருந்த 20 சதவீத வரி விகிதம் உள்ளீர்க்கப்படாமலேயே வரி குறித்து நேற்று டிரம்ப் அறிவித்திருந்தார்.

அதன்படி, சீனாப் பொருட்கள் மீதான அமெரிக்காவின் புதிய வரி விகிதம் 145 சதவீதமாகும் என்று வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது.

### அமெ. வரி தொடர்பில் ஆராயும்

# சர்வ கட்சிக் கூட்டம் சாதகமாக நடந்தது

அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கை இலங்கைக்கு எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பது தொடர்பாகவும் அது தொடர்பில் அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான பரிந்துரைகள் குறித்தும் ஆராய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று சாதகமான முறையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில்நேற்றுஜனாதிபதிஅலுவலகத்தில் நடைபெற்றது. அமெரிக்கா வழங்கியுள்ள 90 நாள்அவகாசத்தில்இந்தப்பிரச்சினைதொடர்பாக ஆராயவென ஆளும் மற்றும் எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியைச் சந்தித்து இந்த விவகாரம் குறித்து ஆராய்வதற்குஎதிர்க்கட்சிநாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து, ஜனாதிபதி இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். ☞ 2

# அமெரிக்க வரியை எதிர்கொள்ள யோசனைகளை முன்வைத்தேன்

### சர்வகட்சிக் கூட்டத்தின் பின்னர் சஜித் தெரிவிப்பு

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில், இலங்கை ஏற்றுமதிகளுக்கு அமெரிக்கா விதித்துள்ள44சதவீதவரிவிதிப்பு தொடர்பில் கவனம் செலுத்தி, இதனைநிவர்த்திசெய்யும்விதமாக பல சாதகமான யோசனைகளை முன்வைத்தேன். தற்போது இணக்கப்பாடு ☞ 8

# பட்டலந்த அறிக்கையின் மீது அன்றே நடவடிக்கை எடுத்திருந்தால் போர்க் குற்றத்தை தடுத்திருக்கலாம்

### சத்தியலிங்கம் எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பான ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட காலக்கட்டத்திலேயே அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இறுதிக்கட்டப் போரின்போது நடந்த பல குற்றச்செயல்களை தடுத்திருக்கலாம். இந்த நாட்டில் இனியொருபோதும் இந்நிலைமை தோற்றம்பெறாமலிருப்பதை உறுதிப்படுத்த வேண்டுமென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிநாடாளுமன்றஉறுப்பினர்சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில்இதனைத்தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் இடம்பெற்ற பாரதூரமான கொலைகள் தொடர்பான குற்றங்கள், நீதித்துறைக்கு விரோதமான கொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவை போன்ற பல விடயங்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அறிக்கை 35 ஆண்டுகளுக்கு பின்னர் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

# திருத்திய சம்பளம் கிடைக்காதோருக்கு ஏப்ரல் 25இல் கிடைக்குமென அறிவிப்பு

அரச ஊழியர்களுக்கான அதிகரிக்கப்பட்ட சம்பளத்தைநேற்றுவழங்கமுடியாதநிறுவனங் களுக்கு சம்பளத்தின் நிலுவைப்பணத்தை வழங்குவதற்காக பிறிதொரு திகதியை அறிவித்து சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டாரவினால் விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரச ஊழியர்களுக்கான திருத்தப்பட்ட சம்பளம் ஏப்ரல் 1-0 வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தின் அடிப்படையில் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை இந்தத் தினத்தில் வழங்க இயலாத நிறுவனங்கள் அரச உத்தியோகத்தர்களுக்கு தற்போதுள்ள சம்பளத்தை செலுத்தவேண்டும். புதிய சம்பள திருத்தத்திற்கமைய நிலுவைத் தொகையை ஏப்ரல் 25 செலுத்த வேண்டும்.

2020ஆம்ஆண்டிற்குமுன்னர்ஓய்வுபெற்ற ஓய்வூதியதார்களுக்கு அதிகரிக்கப்பட்ட தொகை எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வழங்கப்படும். 2020 மற்றும் 2024ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு அடுத்த வருடம் முதலே கொடுப்பனவு அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனி இது .....

இழுபறிப்படும்நிலையிலும், மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவும் உயர் நீதிமன்ற உத்தரவும் ஒன்றுக்கொன்று முரண்படுவது குறித்துமாகப் பேசிக்கொண்டிருந்தபோது, அவர் ஒரு தகவலைச் சொன்னார் அது ஆச்சரியமானதாக இருந்தது.

கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலை மே16வரையும்இடைநிறுத்தமேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மே 6 தேர்தல். எனவே அந்த நாளில் கொழும்பில் வாக்களிப்பு நடக்கவாய்ப்பேயில்லை. மே16ஆம்நாளுக்கு முன்னர் வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துநீதிமன்றத்தின்இடைக்காலத்தடையை நீக்குவதற்கானசாத்தியக்கூறுகளும்இல்லை. அப்படியிருந்-தும் ஆளும் தேசிய மக்கள் சக்தி கொழும்பில் தனது பரப்புரைகளை நிறுத்தவில்லை. தொடர்ந்தும் கொழும்பு மாநகர சபைத் தேர்தலுக்கான கூட்டங்களை நடத்திக்கொண்டே இருக்கின்றது.

புதன்கிழமை இரவுகூட அப்படியொரு கூட்டத்தைத் தான் நேரிலேயே பார்த்தார் என்று அந்த நண்பர் சொன்னார். ஒருவேளை அது கொழும்பை அண்டிய மாநகர மற்றும் நகர சபைகளுக்கான கூட்டங்களாகக்கூட இருக்கலாமே என்று கேட்டேன். அவர் கோபமாகிவிட்டார். கொட்டாஞ்சேனையில் கொழும்பு மாநகர சபை வேட்பாளர்களின் படங்களைப்போட்டுமற்றமாநகரசபைகளுக்கு என்ன கூட்டம்? என்று என்னிடம் சீறினார். ஆக மொத்தத்தில் நீதிமன்றத் தடை உத்தரவுக்குப் பின்னரும் கொழும்பு மாநகர சபைக்கான பரப்புரைகளில் ஆளும்தரப்பு தீவிரமாக இருக்கிறது. இதன் பின்னால் ஏதாவது மர்மங்கள் இருக்குமா என்பதுதான் இப்போது எழுந்துள்ள சந்தேகம்.

தேர்தல் நடக்காது என்று தெரிந்தும் பரப்புரைகளை முன்னெடுப்பதன் பின்னணி என்ன என்பதைத் தோண்டித் துருவ வேண்டியுள்ளது. மலிந்தால் சந்தைக்கு வந்துதானே ஆகவேண்டும்.

................................

விளையாட்டுத்துறை அமைச்சர் நேற்று யாழ்ப்பாணம்வந்தார். புங்குடுதீவில்சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கான இடத்தை அவர் பார்வையிட்டார். அந்த இடம் சர்வதேச மைதானம் அமைக்கப் பொருத்தமற்றது என்று ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட இடம். பிறகேன் அவர் அந்த இடத்தை மீண்டும் போய்ப் பார்த்தார் என்பது அவருக்குத்தான் வெளிச்சம். சாவகச்சேரி நகர சபையின் விளையாட்டு மைதானத்தையும் போய்ப்பார்த்தார். அதனைச்சீரமைப்பதற்காகப் பார்த்தாராம். தேர்தல் நெருங்கிவரும்போது அமைச்சர்களுக்-கு இதெல்லாம் ஞாபகம் வருகிறது.

பிரதமர் ஹரினி இன்று யாழ்ப்பாணம் வருகிறார். நீர்வேலி, தீவகம் ஆகிய இடங்களில் மக்கள் சந்திப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தமக்குச் சாதகமான இடங்களில் ஊடுருவி, உங்கள் பகுதிகளுக்கு எல்லாம் இதற்கு முன்னர் யாராவது ஜனாதிபதியோ பிரதமரோ வந்திருக்கிறாரா நாங்கள்தான் உங்களைத் தேடி வருகின்றோம் என்று அவர்களைத் தூண்டிவிடுவதன் மூலம் தம் பக்கம் இழுப்பதுதான் தேசிய மக்கள் சக்தியின் உத்தி. அவர்கள் சொல்வது உண்மைதான். அதில் மாற்றுக் கருத்தில்லை. இந்த இடங்களுக்கு எல்லாம் இலங்கையின் எந்தப் பிரதமரும் ஜனாதிபதிகளும் இதுவரையில் வந்ததில்லை. ஆனால், பிரதமராகும் வரையில் இப்படிப்பட்ட இடங்கள் இருக்கின்றன என்றாவது பிரதமர் ஹரினிக்குத் தெரிந்திருந்ததா என்பதையும் இந்த மக்கள் அவலப்படுகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டாவது இருக்கிறாரா என்பதையும் அந்த மக்கள்தான் கேட்கவேண்டும் சிந்திக்கவேண்டும்.

பதவியும் அரச பணமும் வாகன வசதிகளும் வந்த பின்னர்தான் ஜேவிபிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இங்கெல்லாம் மக்கள் வாழ்கின்றார்கள் என்பதும் அவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதும் தெரியவந்திருப்பது ஆசியாவின் ஆச்சரியம்தான்.

.............................

தேர்தல் நெருங்கி வரும்போது பலாலி வீதியில் கடும் கட்டுப்பாடுகளுடன் பொதுப் போக்குவரத்து மட்டும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. அதுவும் சரக்கு வாகனங்களுக்கு அனுமதி கிடையாது. இந்த வீதித் திறப்பின்போது தீடீரென பலாலி படை முகாம் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. போருக்குப் பின்னர் உயர் பாதுகாப்பு வலயம் என்று ஒன்று இல்லை என்று இலங்கை அரசு அறிவித்திருந்தது. வடக்கு கிழக்கில் முகாம் பகுதிகளே இருக்கின்றன, உயர் பாதுகாப்பு வலயம் என்று ஒன்று இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றது. ஆனால் பலாலி வீதி திறக்கப்பட்ட நிலையில் போடப்பட்டுள்ள அறிவிப்புப் பலகையில் அது உயர் பாதுகாப்பு வலயம் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அப்படியானால் எப்போது இந்தப் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது? இப்படி எத்தனை இடங்கள் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளன? போரோ, ஆயுதச் சண்டைகளோ இல்லாத நிலையில் ஏன் உயர் பாதுகாப்பு வலயங்கள்? இந்த உயர் பாதுகாப்புவலயங்கள்வடக்கில்மட்டும்தானா அல்லது கிழக்கு கொழும்பு போன்ற பகுதிகளிலும் உள்ளனவா? தேர்தலுக்கு முன்னர் அவற்றையும் தேசிய மக்கள் சக்தி தெளிவுபடுத்தினால் மக்களுக்கு வசதியாக இருக்கும்.

பதிலளிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் தமிழ் மக்கள் இவ்வளவு ஏமாளிகளாகக் கருதி இப்படி வெளிப்படையாக தேர்தல் கால அறிவிப்புக்களைவிடும் எந்தவொரு ஆளும்தரப்பும் இதற்கு முன்னர் இருந்ததில்லை. எனவே இந்த வெளி வேசத்தை மக்கள் நம்பும் வரையில் தமக்குத் தர்மசங்கடமான எந்தக் கேள்விகளுக்கும் அவர்கள் பதிலளிக்க மாட்டார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சுனாமி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்,

இந்தக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி, அமெரிக்காவின் வரியை பெருந்தொற்று மற்றும் சுனாமி பேரழிவைப் போன்ற ஒரு தேசிய பேரிடர் என்று பேசினார் என்று ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இருதரப்பு வழிகள் மூலம் இந்தப் பிரச்சினையைக் கையாள்வதற்கு ஏதுவாக அமெரிக்காவிலிருந்துஇறக்குமதிசெய்யப்படும் பொருட்களுக்கான வரிகளை நீக்கும்படிதான் பரிந்துரைத்தார் என்று ரவி கருணாநாயக்க கூறினார்.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் வரிச் சலுகைகளைப் பயன்படுத்தி இந்திய சந்தைக்கு உற்பத்தி செய்வதற்கான அமெரிக்க முதலீடுகளுக்கான தொடக்க தளமாக இலங்கையை உருவாக்கவும் கருணாநாயக்க முன்மொழிந்தார்.

## புத்தாண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாரதியொருவரின் கடமை நேரம் 14 மணித்தியாலங்களுக்கு மேற்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மற்றுமொரு சாரதியை பணிக்கமர்த்தவேண்டும் பயணிகள் போக்குவரத்து பஸ்களை விசேட சுற்றுலாப் பயணங்களுக்கு ஈடுபடுத்துவதும் புத்தாண்டு காலப்பகுதியில் தடை செய்யப்பட்டுள்ளது என்றுள்ளது.

## சர்வதேச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றுஅமைச்சர்பிமல்ரத்நாயக்கதெரிவித்தார்.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மீதான முதல் நாள் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதேஇதனைத்தெரிவித்தனர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அல்ஜசீரா நேர்காணலின் பின்னரே பட்டலந்தவிடயம்பேசும்பொருளாகமாறியதாக கூறுகின்றனர். அப்படி ஒன்றும் இல்லை எங்களுக்கு அரசியல் முகாமைத்துவம் உள்ளது. ஊழல்வாதிகளிடம் இருந்து நாட்டை காப்பாற்றவே எமது சகோதர, சகோதரிகள் உயிர் தியாகம் செய்தனர்.

இந்த நாட்டை மீட்கும் நோக்கமே இருந்தது. சாதாரண பொது மக்களுக்கு நீதியை நிலைநாட்டக் கூடிய நாடாக எமது நாட்டை மாற்றவே முயற்சித்தோம். கடந்த 35ஆண்டுகளாக சிறு ஆயுதங்களையேனும் நாங்கள் கையில் எடுக்கவில்லை.

1994ஆம்ஆண்டுக்குப்பின்னர்தேர்தலில் போட்டியிட்ட எமது 8 சகோதரர்களைக் கொலை செய்தனர். எனினும்நாங்கள் உண்டிவில்லை ஏனும் கையில் எடுக்கவில்லை. பயத்தினால் அல்ல. ஆயுதத்தில் உள்ள பலம் தொடர்பில் எங்களுக்கு நன்கு தெரியும். அதனை கையில் எடுத்தால் மீண்டும் கீழே வைக்க முடியாது. அது கிற்றாரில்லை.

பட்டலந்த வதைமுகாம் தொடர்பில் பிரதான கொலையாளிகளுக்கு கட்டாயம் நீதிமன்றம் ஊடாக தண்டனை வழங்குவோம். வெளிநாடுகளில் உள்ள சிறந்த அதிகாரிகளையேனும் கொண்டு வந்து ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராகச் சட்டரீதியான அனைத்து விசாரணைகளையும் மேற்கொண்டு அவர்களின் இறுதி காலத்தில் ஏனும் கட்டாயம் நாங்கள் தண்டனையை வழங்க நடவடிக்கை எடுப்போம். அடுத்த விவாத நாளுக்கு முன்னர் இது தொடர்பான விசாரணைக்குழுவை ஜனாதிபதி நியமிப்பார்.

எமது மகன் வருவான் என தினமும் இரவு இரவாக கதவை திறந்து வைத்து காத்திருந்த வடக்கு, கிழக்கு, தெற்கில் வாழ்ந்த அனைத்து அம்மாக்களுக்கு நாம் நீதியைப் பெற்றுக்கொடுப்போம் என்றார்.

## சர்வ கட்சிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கைக்கு ஏற்பஎடுக்கவேண்டியநடவடிக்கைகள்குறித்து ஆராய்ந்து அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு முன்வைத்த விடயங்கள் குறித்து ஜனாதிபதி கட்சித் தலைவர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பான விடயங்கள் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் குறித்தும்இதன்போதுவிரிவாகஆராயப்பட்டது.

அமெரிக்கஅரசாங்கத்துடனானபேச்சுக்கான பரிந்துரைகளைத்தயாரிப்பது மற்றும்ஏற்றுமதி இலக்குகளைபல்வகைப்படுத்துவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு முன்வைத்துள்ள முன்மொழிவுகள்என்பவற்றைஒன்றிணைத்து கட்சித்தலைவர்களுடன்தொடர்ந்துஆராயவும் இதன்போது முடிவு செய்யப்பட்டது.

ஐக்கியமக்கள்சக்தியைபிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் சாணக்கியன், புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் நாடாளுமன்றஉறுப்பினர்ரவிகருணாநாயக்க, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சானக, தமிழ் முற்போக்குகூட்டணியைபிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன்மற்றும்பழனிதிகாம்பரம், ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தி ரிஷாத் பதியுதீன், சர்வஜன பலய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜெயவீர, ஐக்கியதேசியக்கட்சியைபிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர, சுயேச்சைக் குழு 17 சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுன ஆகியோர் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கயந்த கருணாதிலக்க, காவிந்த ஜயவர்தன, மரிக்கார், காதர் மஸ்தான் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்ததாவது:

இந்தக் கூட்டத்தில் நாம் பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினோம். இலங்கைக்கு எதிர்காலத்தில் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை இல்லாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின்பிரதிநிதிதற்போதுஇலங்கையின் வரிச்சலுகை மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் பற்றி கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். இதுவும் எமது ஆடைக் கைத்தொழில் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எமது நாட்டின் பொருளாதார கொள்ளைகளுக்கு அமைய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கையில் சில பிரச்சினைகள் எழுந்துள்ளன. கடந்த ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட செஸ் வரி சில வர்த்தகர்களைக் கோடீஸ்வரர்களாக மாற்றுவதற்கு வழிவகுத்தது. இந்த விடயம் தொடர்பிலும் எமது நிலைப்பாட்டை வெளிப்படுதியிருந்தோம். அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர ஜனாதிபதியிடம் கோரிக்கை கடிதமொன்றை முன்வைத்திருந்தார். எனினும்நாம்கடிதத்தின் உள்ளடக்கத்துடன் உடன்படவில்லை என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்ததாவது:

இந்தக் கலந்துரையாடல் வெற்றிகரமாக அமைந்தது. எமது முன்மொழிவுகளும் ஜனாதிபதியின் முன்மொழிவுகளும் ஒத்ததாக இருந்தன. இந்த விடயம் தொடர்பில் தான் அமெரிக்க ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியதாக ஜனாதிபதி கூறியிருந்தார். அதேபோன்று திறைசேரியின் செயலாளரும் தனிப்பட்ட வகையில் கடிதமொன்றையும் எழுதியிருக்கிறார்என்றுகூறினார். இதற்கமைய இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உலக பொருளாதார நிலமைக்கு அமைய நாட்டின் பொருளாதாரத்தை உலக பொருளதாரத்துடன் இணைப்பதற்கு நாட்டை சுற்றியுள்ளமதிலைஉடைத்துஅதற்குப்பதிலாக பாலத்தை நிர்மானிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்தேன். ஜனாதிபதியும் அதனை ஏற்றுக்கொண்டார். உண்மையில் இந்த பேச்சு சாதகமாக முடிந்தது என்றார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முன்மொழியப்பட்ட புதிய வரி விதிப்புக்கு இலங்கையின் பதில் குறித்து விவாதிக்க அவசரமாக சர்வ கட்சி மாநாட்டை கூட்டவேண்டும் என்ற எங்கள் கோரிக்கைக்கு சாதகமாக பதிலளித்ததற்காக மேன்மைதங்கிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு நன்றி தெரிவிக்கிறோம். என சர்வசன அதிகாரத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானதிலித்ஜெயவீரதெரிவித்தார்.

''உலகளாவிய விவாதங்கள் மற்றும் எச்சரிக்கைகள் இருந்தபோதிலும், அமெரிக்காவால் விதிக்கப்பட்ட மிகச் சமீபத்திய வரிகள் இலங்கையை முற்றிலும் எதிர்பார்க்காதவை. வரவிருக்கும் ஆபத்தை எதிர்கொள்ள ஆளும்தரப்பு தயாராக இருக்கவில்லை என்பது தெளிவாகிறது, ஆனாலும் இப்போது விரைவான மற்றும் தீர்க்கமான பதிலை நாம் வழங்கவேண்டும்.

பல்வேறு விஷயங்களில் நமக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம் என்றாலும், இந்த

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதானோரை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்

## ரிஷாத் எம்.பி. வலியுறுத்து

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு, பல ஆண்டுகளாக சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று அகிலஇலங்கைமக்கள்காங்கிரஸ் தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமானரிஷாத் பதியுதீன் நாடாளுமன்றில் வலியுறுத்தியுள்ளார்.

குற்றச்செயல்களின்வரும்படிகள்சட்டமூலம் தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

இன்று ஒரு முக்கியமான சட்டமூலத்தை கொண்டுவந்திருக்கிறீர்கள். அதற்கு நாங்களும் ஆதரவளிக்கின்றோம். இது நாட்டுக்குத் தேவையானதொன்று சட்டமூலம். எனவே, அதற்காக நன்றி கூறுகின்றோம்.

ஆனால், ஒரு சில விடயங்களை இங்கு சுட்டிக்காட்ட விளைகின்றேன். இந்த அரசாங்கம் அதிகமான மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்த அரசாங்கம். சிங்கள மக்கள் மட்டுமல்ல, தமிழ், முஸ்லிம், மலையக மக்களுடையஆதரவையும்பெற்றுஆட்சிக்குவந்த நீங்கள், பெரிய எதிர்பார்ப்புகளை மக்களுக்கு வழங்கிவிட்டு வந்திருக்கிறீர்கள். எனவே, நீங்கள் கூறிய விடயங்களை நிறைவேற்றுகிறீர்களா? என்று மக்கள் உங்களை உண்ணிப்பாக அவதானித்துக்கொண்டிருக் கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

கடந்த காலங்களில் பிமல் ரத்நாயக்க போன்றவர்கள், இஸ்ரேல் நாட்டுக்கு எதிராக, பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தவர். நட்புறவு சங்கத்தின்தலைவராகவும்பிமல்ரத்நாயக்கதான்இன்னும் இருந்துகொண்டிருக்கிறார் என்று நினைக்கின்றேன்.

இருந்தபோதிலும், அண்மையில், ருஷ்தி என்ற நபரை கைது செய்தமை ஒரு பெரிய பேசுபொருளாக மாறியது. இஸ்ரேலுக்கு எதிராக ஒரு ஸ்டிக்கரை ஒட்டினார் என்பதற்காக அவர் கைது செய்யப்பட்டிருந்தார். கைது செய்யப்பட்டது தவறல்ல, அவரை உடனடியாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி,நீதிவானுடைய உத்தரவின்பேரில்நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால், அந்த விடயம் தவறாகப் பேசப்பட்டிருக்கமாட்டாது. ஆனால், பயங்கரவாத தடை சட்டத்துக்கு கீழ் அவரைக் கைது செய்தமையை, பொலிஸாரின் ஒரு கேவலமான செயலாகவே நான் பார்க்கிறேன்.

இது இந்த அரசாங்கத்துக்கு ஓர் அபகீர்த்தியை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை, எதிர்காலத்தில் நீங்கள் அறிந்துகொள்வீர்கள். பொலிஸாரும் யாரைத் திருப்திப்படுத்துவதற்காக இதனை செய்தார்களோ தெரியவில்லை. எனவே, அவ்வாறான செயற்பாடுகளை நிறுத்த வேண்டும்.

கடந்த காலங்களில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக அதிகமாக பேசிய ஒருவர். இந்த சட்டத்தினூடாக அநியாயமாக பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். இலங்கை வரலாற்றில், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பய்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார் என்றால், அது நானாக மாத்திரம்தான் இருப்பேன். இன்று நான் நிரபராதி. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலோடு எனக்கு சம்பந்தம் இல்லை என்று நீதிமன்றத்தால் சொல்லப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளேன்.

அதேபோன்று, அசாத் சாலி, சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, அஹ்னாப் ஜெஸீம், ராசிக் உள்ளிட்ட இன்னும் பல சகோதரர்களை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தினூடாக அநியாயமாக கைது செய்தனர். ஈஸ்டர் தாக்குதலை யாரோ செய்துவிட்டு, அதை மறைப்பதற்காக அநியாயமாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்தினர்.

இன்றும் கூட, இதற்கு முன்னர் பயங்கரவாதத்தடைச்சட்டத்துக்கு கீழ் கைது செய்யப்பட்ட எத்தனையோ முஸ்லிம் இளைஞர்கள், உலமாக்கள், கல்விமான்கள் ஆகியோர் 4, 5 வருடகாலமாக சிறையில் வாடுகின்றனர். அவர்களது பிள்ளைகள் இன்று பிச்சை எடுக்கின்றனர். திங்கட்கிழமை ஒரு தாய் எனக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, 'நான் பிச்சை எடுத்து என் பிள்ளைகளை வளர்க்கின்றேன்' என்று கூறினார்.

எனவே, இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து, ஈஸ்டர் குண்டு தாக்குதலின் உண்மையான குற்றவாளிகளை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

ஆகையால், தயவுசெய்து நீதி அமைச்சர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, அநியாயமாக சிறைபிடிக்கப்பட்டிருக்கின்றவர்களை,அவசரமாக விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன்.

மேலும், ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் வழக்கு; அவர் ஒரு பிரபலமான சட்டத்தரணி. இன்னும் அவரது வழக்கு முடித்துவைக்கப்படவில்லை. அதேபோன்று, ஐந்து வருடங்களுக்கு முன்னர், நான் புத்தளத்திலிருந்து அகதி மக்களை வாக்களிப்பதற்காக அழைத்துச் சென்றேன் என்ற வழக்கில், என்னை தேடி அலைந்தனர். எனக்கு உதவி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிலரை அநியாயமாகக் கைது செய்தனர். என்னை நிரபராதி என்று நீதிமன்றம் விடுவித்த போதும், எனக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதானவர்களின் வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கின்றது. ஐந்து வருடங்களாக அவர்கள் நீதிமன்றம் ஏறி இறங்குகின்றனர். அவர்கள் என்னை ஒழித்துவைக்கவும் இல்லை, அவர்கள் அதற்கு சம்பந்தமும் இல்லை. அவ்வாறு இருக்கும்பட்சத்தில், அந்த வழக்கு இன்னும் முடித்துவைக்கப்படாமல் இழுவை நிலையே காணப்படுகின்றது. எனவே, சட்டமா அதிபர் திணைக்களம், இவ்வாறான வழக்குகளை கிடப்பிலே போடாமல், இழுபறி நிலையை மாற்றி, அவசரமாக அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதேபோன்று, இஸ்ரேலியர்களின் இலங்கைக்கான வருகையை நீங்கள் சாதாரணமாக நினைக்காதீர்கள். இவ்வாறுதான் பாலஸ்தீனத்திற்குள்ளும் இஸ்ரேலியர்கள் புகுந்து, இன்று பாலஸ்தீனம் அழிந்துகொண்டிருக்கின்றது. அந்த மக்கள் அழிந்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பச்சிளம் குழந்தைகள் பலியாகின்றன. ஐ.நா சபை கண்ணை மூடிக்கொண்டிருக்கின்றது. அமெரிக்காவினதும் நெதன்யாகுவினதும் அடாவடித்தனத்தை கேட்பார்பார்ப்பார் யாருமில்லாத ஒரு துர்பாக்கிய நிலையில், அந்த நாடு இருக்கின்றது.

அவ்வாறு,அந்தமக்கள்துன்பப்படுகின்றபோது, இஸ்ரேலியர்கள் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வந்து, இங்குள்ள பிரதேசங்களை ஆக்கிரமிக்கின்றனர். வெளிகமையில் ஒரு மதஸ்தாபனம், கொழும்பில் ஒரு மதஸ்தாபனம் உட்பட சொத்துக்களையும் வாங்குகின்றனர். சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தி, இந்தநாட்டை சுடுகாடாகமாற்றி, ஒரு மோசமான பொருளாதார நிலைக்கு தள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கின்றன.

எனவே, தயவுசெய்து இஸ்ரேலியர்களின் வருகையை இலேசாகக் கருதிவிடாதீர்கள். அவர்களுக்காக இங்குள்ள மக்களை தண்டிக்காதீர்கள். இஸ்ரேலியர்களை பாதுகாப்பது என்பது, நமது நாட்டை குட்டிச்சுவராக்குவதற்கு நீங்கள் இடும் அடித்தளம் என்பதை மனதிற்கொள்ளுங்கள். - என்று குறிப்பிட்டுள்ளார்.



# வங்கிகளுக்கு இடையிலான துடுப்பாட்ட தொடரில் கொமர்சல் வங்கி முதலிடம்

(சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தில் உள்ள வங்கிகளுக்கு இடையே நடத்தப்பட்ட துடுப்பாட்ட சுற்றுத்தொடரில் கொமர்ஷல் வங்கி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் மக்கள் வங்கியை 38 ஓட்டங்களால் வீழ்த்தி கொமர்ஷல் வங்கி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

எட்டு வங்கிகள் பங்கெடுத்த மேற்படி தொடரில் இரண்டாம் இடத்தை மக்கள் வங்கியும், மூன்றாம் இடத்தை ஹற்றன் நஷனல் வங்கியும் பெற்றுக்கொண்டுள்ளன.

இலங்கைவங்கியின்பிரதான அனுசரணையுடன்இடம்பெற்ற மேற்படி தொடரின் இறுதிப்போட்டியில் பிரதம விருந்தினராக ரோட்டரி உதவி ஆளுநர் ரோட்டரியன் ரகுராமும், சிறப்பு விருந்தினராக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் துஸ்யந்தனும், கௌரவ விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வசந்தனும் கலந்து சிறப்பித்திருந்தனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மாற்றத்தின் தோல்வி

**தனக்குத்தனக்கென்றால்சுளகுபடக்குப்படக்கென்னுமாம் என்றொரு சொலவடை தமிழில் உண்டு. அடுத்தவர்களுக்கு ஏதாவதொன்றென்றால் அது குறித்துப் பேசாமல் இருப்பவர்கள் தமக்கு ஏதுமொன்றென்றால் துள்ளிக் குதிப்பார்கள் என்பதைக் குறிக்கும் சொலவடை அது. ஆளும் தேசிய மக்கள் சக்தியின் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவின் நேற்றைய நாடாளுமன்ற உரையைக் கேட்டபோது இந்தச் சொலவடை ஞாபகத்திற்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.**

**பட்டலந்தவதைமுகாம்விசாரணை அறிக்கையில் அந்தக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருக்கும் நிலையில், அந்தக் குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தவர் என்று குறிப்பிடப்படும் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கமீது உலகின் ஆதரவைப் பெற்றாவது நடவடிக்கை எடுப்போம் என்று சபை முதல்வர் தனது உரையில் தெரிவித்திருக்கிறார்.**

**''பட்டலந்த வதைமுகாம் தொடர்பில் பிரதான கொலையாளிகளுக்கு கட்டாயம் நீதிமன்றம் ஊடாக தண்டனை வழங்குவோம். வெளிநாடுகளில் உள்ள சிறந்த அதிகாரிகளையேனும் கொண்டு வந்து ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராகச் சட்டரீதியான அனைத்து விசாரணைகளையும் மேற்கொண்டு அவர்களின் இறுதி காலத்தில் ஏனும் கட்டாயம் நாங்கள் தண்டனையை வழங்க நடவடிக்கை எடுப்போம். அடுத்த விவாத நாளுக்கு முன்னர் இது தொடர்பான விசாரணைக்குழுவை ஜனாதிபதி நியமிப்பார்" என்று அவர் தெரிவித்தார்.**

**இதே ஆளும் தேசிய மக்கள் சக்திதான் இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானக் குற்றங்கள் தொடர்பில் தமிழர்கள் கோரும் அனைத்துலக விசாரணையை மறுக்கிறது. அதுமட்டுமல்ல இலங்கை அரசு 2015இல் இணங்கிக்கொண்ட பொதுநலவாய நாடுகளின் சட்ட ஆலோசகர்கள், வழக்குத் தொடுநர்கள், குற்றஞ்சாட்டுநர்களைஉள்ளடக்கியநீதிப்பொறிமுறைஒன்றை இலங்கையின் சட்டங்களுக்கு ஏற்ப நிறுவுவதற்கும் இந்த ஆளும்தரப்பு மறுத்து வருகின்றது. இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று இந்த ஆளும்தரப்பு ஏற்கனவே இரு தடவைகள் திட்டவட்டமாக அறிவித்தும்விட்டது.**

**தமது கட்சிக்காரர்கள்பாதிக்கப்பட்ட, சிங்களவர்கள்மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்குவெளிநாடுகளில்உள்ளசிறந்தஅதிகாரிகளைக் கொண்டு வந்து நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கும் தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறலகள் மற்றும் கொடுமைகளை விசாரிப்பதற்கு மட்டும் பொதுநலவாய நாடுகளின் அதிகாரிகளைக்கூட ஏற்கமாட்டேன் என்கிறது.**

**சிங்களவர்கள்ஆகியஒருகண்ணுக்கும்வெண்ணெய்யும் தமிழர்களாகிய மற்றொரு கண்ணுக்குச் சுன்னாம்பும் வைக்கும் இத்தகைய நடைமுறையைத்தான் இலங்கையின் 75 வருடகால ஆட்சியாளர்களும் மேற்கொண்டு வந்தனர். மாற்றத்திற்காக வாக்குறுதியளித்து, அதற்காகவே தமிழ் மக்களும் தமக்கு வாக்களித்தனர் என்று பெருமை பேசும் தேசிய மக்கள் சக்தியும் இந்தப் போக்கிலிருந்து எந்தவிதத்திலும் மாறவில்லை என்பதையே சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவின் கருத்து தெளிவாக எடுத்தவைக்கின்றது.**

**ஆகமொத்தத்தில் தமிழர்களைப் பொறுத்தவரையில் மாற்றம் வெறும் கானல் நீர்தான்.**



# கரை சேருமா?

**என். சத்தியமூர்த்தி**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணத்தைத் தொடர்ந்து, மீனவர் பிரச்சினை குறித்து, இரு நாட்டு தமிழ் தலைவர்களும் பேச்சு நடத்தி தீர்விற்கு வழி வகுக்கலாம் என்ற கருத்து மீண்டும் துளிர்விட்டுள்ளது. களநிலையை வைத்து பார்க்கும்போது, இது தீர்வுக்கு வழி வகுக்காது. மாறாக, அதனை இன்னமும் குழப்பமாக்கும்.

வடமாகாண தமிழ் மீனவர்களைப் பொறுத்தவரையில், இது ஒரு வாழ்க்கை பிரச்சினை, வாழ்வாதார பிரச்சினை. இங்குள்ள தமிழ் அரசியல் தலைவர்களும் இந்த ஒரு விடயத்திலாவது, ஒரு-வரி செய்தியாக அவர்களுடைய நிலைபாட்டிற்கு ஆதரவு தெரிவிப்பதோடு நிறுத்தி விடுகின்றனர்.

அண்மை காலத்தில்தான், தென்னிலங்கை அரசியல் தலைமைகள் போல், தாங்களும் இந்தப் பிரச்சினை குறித்து இந்திய தலைவர்களுடன் பேசலாம் என்று இங்குள்ள தமிழ் தலைவர்களுக்கு உறைத்துள்ளது. அந்த வகையிலேயே. அவர்களில் நான்கு அரசியல் கட்சிகளை சேர்ந்த எழுவர் பிரதமர் மோடியை சந்தித்தபோது, இது குறித்துப் பேசினர். அனைவரும் ஒரே குரலில் பேசினர் என்பது முக்கியமான விடயம். ஆனால், இரு நாட்டிலும் அரசியல் களநிலமை அல்லது கடல் நிலையே வேறு.

வடமாகாணத்திலும் சரி, தமிழ் நாட்டிலும் சரி, இந்தப் பிரச்சினையை முன்னிறுத்தி அரசியல் தலைவர்கள் உள் நாட்டிலேயே வாக்குவாதம் செய்கிறார்கள். அடுத்தவனுக்கு நான் இளைத்தவன் இல்லை என்று இங்குள்ள மீனவர்கள் எதிர்பார்க்காத முன்னெடுப்புகளை முன் வைத்து, இரு தரப்பு இரத்த உறவுகளையும் பகையாளிகளாக மாற்றுகிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அங்கு நிலவும் அரசியல் சூழல், இராமேஸ்வரம் மீனவர்களிடையேயும் பிரதிபலிக்கும். தமிழ் நாடு மற்றும் புதுச்சேரி, -காரைக்கால் மீனவர்களின் தொழில் மற்றும் உயிர் பாதுகாப்பிற்கு மத்திய அரசு ஆவன செய்ய வேண்டும் என்பதில் அனைத்து தரப்பினரும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளனர்.

பேச்சில் தொய்வு

இதுவே இலங்கை தமிழ் மீனவர்களுக்கு ஏற்புடையது இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில் இந்திய மீனவர்கள் 'பொட்டம் ட்ரொலர்' என அறியப்படும் இழுவை படகுகளையும் சுருக்கு மடி வலைகளையும் பயன்படுத்துவதற்கே எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அல்லது, அவ்வாறானகருத்துப்பொதுவாகநிலவுகிறது.

இந்த விடயம், கடந்த காலங்களில் இரு தரப்பு மீனவர்கள் பிரதிநிதிகளிடையேயும் நடைபெற்ற பேச்சுக்களின்போது தெள;ளதெளிவாக தெரிவிக்கப்பட்டது. கடந்த 2016ஆ-ம் ஆண்டு. சென்னையில் நடைபெற்ற பேச்சுக்களுக்குப் பின்னர் ஒரு தொய்வு விழுந்தது. அதற்கான காரணம், தமிழ் நாடு அரசியலே அன்றி, இரு தரப்பு மீனவர்களிடையே தோன்றிய கருத்து வேறுபாடுகள் அல்ல.

அதேசமயம், அண்மையில், மோடியின் பயணத்திற்கு முன்னர் வவுனியாவில் ஆளும் ஜேவிபி கட்சி அலுவலகத்தில் மீன் வளத்துறை அமைச்சர் சந்திரசேகரன் முன்பு நடைபெற்ற பேச்சுக்களிலும் முந்தைய கருத்தே மீண்டும் இலங்கை தமிழ் மீனவர் தரப்பால் முன் வைக்கப்பட்டது. இதுவே, அடுத்தடுத்து ஆட்சி பொறுப்பேற்றுள்ள கட்சிகள் மற்றும் அரசுகளின் நிலைபாடும்கூட.

## கால அவகாசம்

உண்மையில். விடயம் அவ்வாறல்ல. இலங்கை தமிழ் மீனவர்களை பொறுத்தவரையில், தங்களது இந்திய சொந்தங்கள், தடை செய்யபபட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தாத வரையில், அவர்களுடன் பேச்சு மூலமான தீர்விற்கு தயார் என்று தொடர்ந்து தெரிவித்து வந்துள்ளனர். தமிழ் நாட்டு மீனவர் பிரதிநிதிகளும் அவ்வாறு செய்வதாக வாக்களித்து, அதற்காகத் தங்களுக்குக் கால அவகாசம் தேவை என்று கூறி வந்துள்ளனர்.

அவ்வாறு தமிழ் நாடு கோரிய கால அவகாசம், பல முறை கடந்து போய்விட்டது. ஆனால் அவர்கள் இழுவை படகுகளையும் சுருக்கு மடி வலைகளையும் விடுவதாக இல்லை. அவர்களை பொறுத்தவரையில், முதலில் ஒப்பந்தம், பின்னர் கால அவகாசம் என்ற வகையில் எண்ணி செயல்படுவதாக வேண்டுமென்றால் வைத்துக்கொள்ளலாம். ஆனால், வட மாகாண மீனவர்கள், அதனை மாற்றிப்போட்டே யோசித்து வருகிறார்கள் எனலாம்.

## அரசியல் உள்குத்து

இதில் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு விடயம் உள்ளது. இரு நாட்டு மீனவர்களிடையேயான பேச்சு இந்த முறை ஓர் அரசியல் கட்சியின் முன்னெடுப்பில் நிகழ்ந்துள்ளது. இன்னும் சொல்லப்போனால், ஆளும் கட்சியின் அலுவலகத்தில், அதுவும் துறை அமைச்சரின் முன்னிலையில் இந்த பேச்சு நடந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து, இந்தப் பிரச்சினை வட மாகாணத்தில் அரசியல் ரீதியாகவே முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். இதனால், அரசியல் உள்குத்துகளில் இனப்பிரச்சினை போல் மீனவர்கள் பிரச்சினையம் சீரழியும் வாய்ப்பு உள்ளது. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

ஜேவிபி-ன் தலையீடு இல்லாமலே, தமிழர் அரசியல் பரப்பில் மீனவர் பிரச்சினை மெதுவாக சிக்கிக்கொள்ளும் வாய்ப்புகள் இருந்து வந்தது. முந்தைய அரசுகளில் மீன்வளத்துறை அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா, இந்தப் பிரச்சினையை அவ்வப்போது அரசியலாக்கி வந்துள்ளார். அது போன்றே, அவரை எதிர்த்து வந்துள்ள பிற தமிழ் அரசியல் தலைவர்களும் ஏட்டிக்கு போட்டியாகவே நடந்து வந்துள்ளனர்.

இதன் காரணமாகவே, சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் அரசு கட்சி

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# கரை சேருமா?

4ம் பக்கத் தொடர்ச்சி...........

இந்தப் பிரச்சினை குறித்து, ஒரு முறைக்கு இரு முறை தீர்மானங்கள் நிறைவேற்றியது. தொடர்ந்து 2017ஆம் ஆண்டு அன்று நாடாளுமன்ற உறுப்பினராக



இருந்த சுமந்திரன், எல்லை மீறியமைக்காக இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்படும் வெளிநாட்டு மீனவர்களுக்கான தண்டனையை அதிகரிக்கும் வகையில் சட்ட முன்வடிவம் ஒன்றை 'தனி நபர்' பிரேரணையாக அவையில் முன் வைத்தார்.

அப்போதுமைத்திரிபாலசிறிசேனாஜனாதிபதியாக இருந்தார். அவரின் கீழ் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கே, சுமந்திரனின் முன் மாதிரியின் அடிப்படையில் அரசு சார்ப்பாக ஒரு புதிய சட்டதிருத்தத்தை நாடாளுமன்றத்தின் முன் சமர்ப்பித்தார். அதனை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஏகமனதாக நிறைவேற்றினர்.

## கடலில் போராட்டம்

இந்த சட்டத்தின் அடிப்படையிலேயே தற்போது தமிழ் நாட்டு மீனவர்கள் மீது அதிகப்படியான சிறை தண்டனையும் அபராத தொகையும் விதிக்கப்படுகிறது. அவர்களுடைய ட்ரொலர்களை இலங்கை கடற்படை சிறைபிடிப்பதற்கும் சுமந்திரன் பிள்ளையார் சுழி இட்ட அந்த சட்டமே வகை செய்கிறது.

இடைப்பட்ட பல்வேறு காலகட்டங்களில், டக்ளஸ் தேவானந்தாவும், தனது தொண்டர்களுடன் கடலில் இறங்கி, இந்திய படகுகளை தடுத்து நிறுத்துப்போவதாக ஒரு போராட்டம் துவங்கினார். நல்ல காலம், அது ரசபாசமாக மாறுவதற்கு முன்னர் அவரே, அந்த போராட்டத்தை கைவிடுவதாக அறிவித்தார். ஆனால், ரணில் ஜனாதிபதியாக இருந்த முந்தைய அரசில் மீன்வளத்துறை அமைச்சரான, டக்ளஸ் செய்த ஒரு செயலை தமிழ் தலைமைகள் எதுவுமே கண்டுகொள்ளவில்லை. எனவே கண்டிக்கவும் இல்லை.

இலங்கை அமைச்சராக பதவி வகித்த டக்ளஸ் தலைநகர் கொழும்புவில் சீன தூதுரகம் சென்று அந்த நாட்டு தூதுவரை சந்தித்து, இந்திய- - இலங்கை மீனவர் பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அல்லது, அவ்வாறுதான் கோரியதாக அவரே பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## சீண்டிப் பார்க்கும் செயல்

வடமாகாணத்தை சேர்ந்த அமைச்சர் டக்ளஸ் ஆதரவு இருந்ததினால் தானோ என்னவோ, அப்போதைய சீன தூதுவரும் தூதரக அதிகாரிகளும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அடிக்கடி பயணம் மேற்கொண்டனர். குறிப்பாக, வடக்கில் உள்ள மீனவ குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கினர்.

ஏன், சீன தூதுவர், வட மாகாணத்தில் தனது முதல் பயணத்தின்போது கொழும்பு அரச தலைமையின் ஆதரவுடன், கடற்படையின் படகில் சென்று, இலங்கை - இந்திய கடல் எல்லை பகுதி வரை பார்த்துத் திரும்பினார். இந்தியாவைச் சீண்டிப் பார்க்கும் இந்தச் செயலை இங்குள்ள தமிழ் தலைவர்கள் யாருமே கண்டு கொள்ளவில்லை. காரணம், இனப்பிரச்சினை விடயத்தில், அப்போது, அவர்களுக்கு இந்தியா மீது, ஏட்டிக்கு போட்டியான கோபம். அவ்வளவுதான். ஆனால், தற்போது, மோடியின் பயணத்திற்கு முன்னர், நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வடமாகாணத்தில், இந்தியாவிற்கு எதிராக (சீனாவை) தூண்டிவிடும் எந்த செயல்பாட்டிற்கும் தமிழ் மக்கள் துணை போகமாட்டார்கள் என்று பத்திரிகை செய்தி வெளியிட்டார்.

இப்போது, இனப்பிரச்சினைக்கான தீர்வில், இந்தியாவின் பங்களிப்பு தேவை என்று மீண்டும் அவர் கருதியதின் விளைவே இது என்றே எண்ணத் தோன்றுகிறது. இந்தப் பின்னணியில், இலங்கை தமிழ் அரசியல் தலைவர்கள், தமிழ் நாடு தலைமைகளுடன் பேச்சு நடத்தினால், அவர்களுடைய கடந்த கால செயல்பாடுகளுக்கு பதில் சொல்ல பாத்தியப்படுவார்கள். குறிப்பாக, சுமந்திரனின் சட்ட முன்வடிவு, டக்ளஸின் சீனா ஆதரவு நிலைபாடு, இதுபோன்ற முன்னெடுப்புகளுக்கு மற்ற தமிழ் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு அல்லது ஆதரவு தெரிவிக்கும் மௌனம்.. இவை அனைத்திற்கும் இங்குள்ளவர்கள் பதில் சொல்ல வேண்டிவரும். அதற்கு அவர்கள் தயாரா?

## முண்டியடித்து...

இது இப்படி என்றால், தமிழ் நாடு அரசியலில், இரு நாட்டு மீனவர் பிரச்சினை என்றாலே, அத்துடன் கச்சதீவு பிரச்சினையும் முண்டியடித்து முன் வரிசைக்கு வந்துவிடுகிறது. இந்த முறை குறிப்பாக, பிரதமர் மோடியே, கச்சதீவு பிரச்சினையில் தமிழ் நாட்டில் ஆளும் திமுக, மற்றும் முதல்வர் ஸ்டாலினின் காலம் சென்ற தந்தை கருணாநிதியை வம்புக்கு இழுத்திருந்தார்.

மோடி செய்தது கடந்த வருடத்திய தேர்தல் காலத்திய அரசியல் என்றாலும், அவரது ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாட்டு தலைவர்கள், அதனை பிடித்துக் கொண்டு, திமுக- காங்கிரஸ் கூட்டணியை தொடர்ந்து வம்புக்கு இழுத்து வருகின்றனர். குறிப்பாக அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் தமிழ் நாடு சட்ட பேரவை தேர்தல் காலத்தில், கச்சதீவு பிரச்சினை மாநில அரசியலில் மீண்டும் ஒரு ரவுண்ட் வரவிருக்கிறது.

அந்த சமயத்தில், அதிமுக்கியத்துவம் வாய்ந்த மீனவர் பிரச்சினை, ஓரத்திற்கு தள்ளப்படும் வாய்ப்பு உள்ளது இப்போது போலவே அப்போதும் தமிழ் நாட்டின் கரிசனை மீனவர்கள் கைது, படகுகளை தடுத்து நிறுத்தல் போன்ற விடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கும். முடிவான தீர்விற்கு அல்ல.

அது மட்டுமல்ல், இங்குள்ள தமிழ் அரசியல் தலைமைகள், இந்திய அரசியலில் குறிப்பாக தமிழ் நாடு தேர்தல் கால அரசியலில் பக்கச் சார்ப்பாகப் பேசுவதற்கான கட்டாயம்கூட உருவாகலாம். தமிழ் நாடு அரசியல் குறித்து முழுமையாகப் புரிந்துகொள்ளாமலே, அனைத்தும் அறிந்ததாக உள்ளூரில் கதையளக்கும் இலங்கை தமிழ் தலைமைகள், ஏதாவது சிக்கலில் ஏடாகூடமாக சிக்கிக்கொள்ளகூடும்.

அத்துடன், இங்குள்ள மீனவர்களையும் தங்களது அரசியல் ஞானசூனியத்திற்குப் பலி ஆடு ஆக்கலாம். இதுவும் தேவையில்லாத விடயம்தான். இதற்கு முக்கிய காரணம், இரு நாட்டு அரசியல் தலைமைகளும் மீனவர் பிரச்சினையை தங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொள்ள முயல்கின்றனர். உண்மையான தீர்வுக்கு அவர்கள் வழி தேடுவதில்லை.

## இரண்டு பத்தி தீர்மானம்

பிரதமர் மோடியின் இலங்கைப் பயணத்திற்று இரண்டு -மூன்று தினங்களுக்கு முன்னர், தமிழ் நாடு சட்டப்பேரவையில், தமிழ் நாடு அரசு சார்பில் முதல்வர் ஸ்டாலின் முன்மொழிந்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. 'கச்சதீவை இந்தியா மீட்கவேண்டும்' என்ற தொனிப்பொருள் அடங்கிய இரண்டு பத்தி தீர்மானத்தில ;இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் தமிழ் நாடு மீனவர்களின் விடுதலையே முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இரண்டு பிரச்சினைகளிலும், இந்திய பிரதமர் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூறிய தீர்மானத்தை அவையில் எதிர்க்காமல், அவர் சார்ந்த பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள். ஆனால், குறிப்பாக கச்சதீவு பிரச்சினையில், திமுக-வையும் கருணாநிதியையும் தொடர்ந்து குற்றம்சாட்டி வரும் எதிர்கட்சியான அஇஅதிமுக-வே, தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தது.

அனைத்துத் தரப்பினரும் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தலை மனதில் கொண்டு காய் நகர்த்துகிறார்கள். இங்கு, வட மாகாணத்திலோ அதைவிட அவசரம். அடுத்த மாத உள்ளாட்சி தேர்தல்களே அவர்கள் முன்னால் நிழலாடுகிறது. அதிலும் குறிப்பாக, கடந்த வருட நாடாளுமன்ற தேர்தலில், வட மாகாணத்தில் ஆளும் ஜேவிபி அதிக வாக்குகளையும் ஆசனங்களையும் பெற்றதைத் தொடர்ந்து, அந்தக் கட்சி உள்ளிட்ட அனைத்து தரப்பினருமே, மீனவர் சமுதாயத்தின் மீதும் முன்னெப்போதும் இல்லாத கரிசனை கொண்டிருக்கின்றனர்.

இவை அனைத்திற்கும் அப்பால் சென்று, தமிழ் நாடு அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரையில், இலங்கைப் இனப்பிரச்சினை ஆகட்டும், இரு நாட்டு மீனவர் பிரச்சினை ஆகட்டும், அவற்றிற்கான தீர்வுத் திட்டங்களை இந்தியாவின் மத்திய ஆட்சியால் மட்டுமே முன்னெடுக்க முடியும் என்று திடமாக நம்புகின்றனர். அதுதான் இந்திய அரசமைப்புக் கூறுவதும்.

குறிப்பாக, முதலைமைச்சர் ஸ்டாலின், இந்த இரு பிரச்சினைகள் குறித்தும் தன்னோடு பேச விழையும் இலங்கை தமிழ் தலைவர்களை தள்ளியே வைத்து வருகிறார். காரணம், அவர்கள் தனியாகச் சந்திக்கும்போது ஒரு வகையில் பேசிவிட்டு, யாழ்பாணத்தில் வேறு விதமாகச் செய்திகளை வெளியிடுவார்களோ என்ற கவனம்தான். காரணம், இந்தப் பிரச்சினைக்கான தீர்வை தமிழ் நாடு அரசு முன்னெடுக்கவும் முடியாது, முடிவெடுக்கவும் முடியாது என்பதே நிலைமை.

இதனால்தான், இங்கு சுற்றுபத்தாரிடம் ஸ்டாலினை சந்திக்க தான் சமயம் கேட்டிருப்பதாக இங்கு கூறிக்கொள்ளும் இங்குள்ள தமிழ் தலைவர்களுக்கு அவரிடமிருந்து பதில் கடிதம்கூட வருவதில்லை என்றே தோன்றுகிறது. ஏன், பொங்கல் காலகட்டத்தில், சென்னையில் தமிழர் விழாவை முன்னெடுத்த தமிழக முதல்வருடன் இங்கிருந்து சென்ற தலைவர்கள், ஒரு சேர 'செல்பி' எடுத்துக் கொண்டதோடு சரி. அவரைச் சந்தித்தனர் என்று ஒரு வரிச் செய்திகூட இல்லை.

## உறுதிமொழி

பிரதமர் மோடி, இலங்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு இராமேஸ்வரம் வழியாக நாடு திரும்பிய அடுத்த தினமே, தமிழ்நாடு சட்டப்பேரவையில், முதல்வர் ஸ்டாலின் இராமேஸ்வரம் மீனவர்களை மனதில் நிறுத்தி ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதில் குறிப்பிடப்பட்ட பல்வேறு திட்டங்களும் இராமேஸ்வரம் மீனவர்கள், கடல் எல்லை தாண்டி இலங்கை, அதிலும் குறிப்பாக வட மாகாண கடல் பிராந்தியத்தில் தொழில் செய்வதில் இருந்து மாற்றுவழிக்குச் செல்வதைக் குறிக்கோளாகக் கொண்டவை.

இதன் ஒரு பகுதியாகவே, இராமேஸ்வரம் பகுதியில் தங்கச்சிமடத்தில் ஆழ்கடல் மீன்பிடி துறைமுகம் ஒன்றை நிறுவுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்வதாக முதல்வரின் அறிவிப்பு. இது போன்றே, படகு தயாரிப்பு மற்றும் மீன் வலை பின்னல் போன்ற பிற தொடர்புடைய தொழில்களில் பயிற்சி கொடுப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதாவது, தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படாமல் இருக்க, இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன் பிடிப்பிற்கு செல்லவேண்டும் என்ற மத்திய -மாநில அரசுகளின் திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாகவே முதல்வர் ஸடாலினின் அறிவிப்பு அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து மத்திய அரசும் ஆழ்கடல் மீன்பிடிப்பு குறித்துக் கரிசன நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.

அவ்வாறெல்லாம் நிறைவேறிவிட்டால், அதன் பின்னர், இரு நாட்டு தமிழ் மீனவர்களும் இழுவை படகு மற்றும் சுருக்குமடி வலை இல்லாத கடலில் ஒரு சேர பயணிப்பதற்கான பேச்சுக்களைத் தொடங்க ஏதுவான சூழ்நிலை உருவாகும். அதற்குச் சில ஆண்டுகள்கூட ஆகலாம். ஆனால், அதனை நோக்கியே பயணிக்கிறோம் என்ற நம்பிக்கை வட மாகாண மீனவர்களுக்கு தோன்றுவதற்கு ஏதுவான சூழ்நிலை உருவாகலாம்.

ஆனால், இரு நாட்டு மீனவர்களும் நினைப்பது போல், எந்த முடிவும் அவர்கள் கையில் இல்லை. மாறாக, இலங்கை அரசிடமும், கடற்படையிடமும்தான் உள்ளது. அவர்கள்தானே, கடல் எல்லை கடந்து வரும் இந்திய மீனவர்களைக் கைது செய்யமாட்டோம் என்று உறுதி அளிக்க வேண்டும். அந்த உறுதி மொழியை கடைபிடிக்கவும் வேண்டும். அதற்கான ஆட்சி-அதிகாரம் வட மாகாண மீனவர்களிடம் இல்லை.

இதுதான் உண்மை!

காலைக்கதிர் Kalaikkathir

# ‘சமுர்த்தி அபிமானி’ சந்தைப்படுத்தல் பொலிவேரியனில் செவ்வாய் நடந்தது

(ஸாகிர்)





சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையில் சாய்ந்தமருதில் இடம்பெற்ற ‘சமுர்த்தி அபிமானி’ சந்தைப்படுத்தல் நிகழ்வு சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தின் பல் தேவை கட்டடத் தொகுதி வளாகத்தில் செவ்வாய்க்கிழமை மிக சிறப்பாக நடைபெற்றது.

சமுர்த்தி மற்றும் நலன்புரி உதவி பெறும் மக்களது உற்பத்திகளுக்கு உரிய சந்தைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் வருடாவருடம் இந்த அபிமானி சந்தைப்படுத்தல் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.





சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிகா நிகழ்வில் கௌரவ அதிதிகளாகவும் திட்டமிடல் திட்ட முகாமையாளர் எஸ். றிபாயா, சமுர்த்தி வங்கி சங்க முகாமையாளர் எ.எம்.எம். றியாத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ். ஹிதாயா, நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம். றம்ஸான், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சர்பீன், கருத்திட்ட உதவியாளர் ஜாபீர், வலய உதவி முகாமையாளர் நௌஷாத், சனசமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள், பொது முகாமைத்துவ அதிகாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வை சிரேஷ்ட அறிவிப்பாளர் ஐ. ஜாபீர் தொகுத்து வழங்கினார்.

இதன்போது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தியவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் விதிமுறைகளுக்கு முரணாக மட்டக்களப்பில் அநுரவின் விளம்பரம்

## பொலிஸார் அகற்றினர்

(சக்திவேல்)

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்பு முதல் தடவையாக இன்று (சனிக்கிழமை) மட்டக்களப்புக்கு வருகை தரவுள்ளார்.

இதனை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் அவரது வருகையை அறிவிக்கும் பதாகைகள் கட்சியால் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இவை தேர்தல் விதிமுறைகளுக்கு முரணானது என முறைப்பாடு கிடைத்ததை அடுத்து மாவட்ட தேர்தல் கண்காணிப்புக் குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து புதன்கிழமை இரவு மாவட்ட பொலிஸாரால் இப்பதாகைகள் அகற்றும் பணிகள் மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எம்.சுபியான் தலைமையில் முன்னெடுக்கப்பட்டன. மாவட்ட செயலக தேர்தல் கண்காணிப்பு குழு உயர் அதிகாரிகளும் இதன் போது பிரசன்னமாகி இருந்தனர்.







# புத்தாண்டை முன்னிட்டு விசேட பாதுகாப்பு திட்டம்

தமிழ், சிங்கள புத்தாண்டை பொதுமக்கள் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

அதன்படி, 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகை அதிகம் உள்ள நகரங்களில், சிவில் உடையில் புலனாய்வு பிரிவு அதிகாரிகளை பணியில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைக்காக போக்குவரத்து பொலிஸார் உட்பட சுமார் 6,000 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





நான்கு வகை நிலத்திலும்
காணி விற்பனைக்கு!
Premium Lands with 100% Legal Security
8 இலட்சம் முதல்
* தவணைக் கட்டண வசதிகள் செய்து தரப்படும்.
விளையாட்டு, ஆரோக்கியம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு
என 20+ இற்கு மேற்பட்ட வசதிகளுடன்..!
முல்லை
எழுதுமட்டுவாழ்
மருதம்
கிழக்கு அரியாலை
குறிஞ்சி
மலையகம்
(ஹப்புத்தளை நகர்)
நெய்தல்
மட்டக்களப்பு
(வாவிக் கரையோரம்)
ஏப்ரல் 14ம் திகதிக்கு முந்திய பதிவுகளுக்கு விசேட விலைக்கழிவு
இப்போதே முன்பதிவு செய்யுங்கள்!
இயற்கையின் அரவணைப்பில் எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடு..!
இனிமையான வாழ்விற்கு..!
GOOD GIFT
PROPERTY DEVELOPERS (PVT) LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
+94 77 743 5557

## பட்டலந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் இப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்ற பல அறிக்கைகள் வடக்கு மற்றும் கிழக்கில் நிலவிய போர்க் காலத்தின்போதும் மக்கள் விடுதலை முன்னணியின் எழுச்சிக் காலத்தின்போதும், நடைபெற்ற மனித குலத்திற்கு எதிரான போர்க்குற்றங்கள்போன்றபலவிடயங்களைக் கொண்ட பல்வேறு அறிக்கைகள், பட்டலந்த அறிக்கையைப் போன்று பல வருடங்களாக ஆராயப்படாமல் களஞ்சியங்களில் இருக்கின்றன.

இவ்வாறான அறிக்கைகளை நாடாளுமன்றத்திற்குகொண்டுவந்துஅவற்றை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு அதனை அப்படியே கைவிட்ட வரலாறுகள் உள்ளன. அதனால் இந்த அறிக்கையை விவாதிப்பது மட்டுமன்றி அறிக்கையில் குற்றவாளிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு எதிரான முறையான விசாரணைகளை நடத்தவேண்டும்.

அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும். அவர்கள் பொறுப்புக் கூறுபவர்களாக இருக்க வேண்டும். இந்த பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதன் ஊடாக இவ்வாறான குற்றங்கள் மீள ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நாட்டில் இடம்பெற்ற போரின் இறுதிப்பகுதியில் இதேபோன்று மனித குலத்திற்குஎதிரானகுற்றங்கள்,நீதிக்குபுறம்பான கொலைகள், காணாமல் ஆக்கப்படுதல், உறவுகளால் கையளிக்கப்பட்டவர்கள் வீடு திரும்பாமை, போர்க் குற்றங்கள் போன்றவை பல அறிக்கைகளில் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால் அந்த அறிக்கைகளை எடுத்து நடவடிக்கை எடுக்கும்போது நாட்டுக்காக போராடியவர்களைக் காட்டிக்கொடுப்பதாக இங்குள்ள அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

எத்தனை அறிக்கைகளை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வருகின்றோம் என்பதில் பிரச்சினையில்லை. ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாக இருந்திருந்தால், போரில் இறுதிப்பகுதியில் போர்க்குற்றங்களை செய்தவர்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை செய்தோர். பயத்திலேயே அதை செய்திருக்க மாட்டார்கள்.

எவ்வாறாயினும் அறிக்கைகளில் உள்ள முடிவுரைகளுக்கமைய சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதன் ஊடாக நாட்டில் இவ்வாறான குற்றங்கள் மீள நடக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு இந்த ஆளும்தரப்பு உள்ளது.

நாங்கள் அரசியல் காரணங்களுக்காக மட்டும் இந்த அறிக்கைகளை புரட்டாமல், இந்த நாடு ஒரு அமைதியான எல்லா மக்களும் வாழக் கூடிய நாடாக மாற வேண்டுமாக இருந்தால் இந்த ஆணைக்குழு அறிக்கையில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த இந்த அரசாங்கமாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## முடிந்தால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்புநிலையங்களைநிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றினை விசாரணை செய்த ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசாங்கம் ரணில் விக்ரமசிங்கவின் ஒரு முடியையேனும் அசைக்கப் போவதில்லை. பட்டலந்த பிரேரணையை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வருவதை ஜனாதிபதி விரும்பவில்லை. அதிகாரிகளைக் கைது செய்யும் இந்த ஆளும்தரப்பு முன்னாள் அமைச்சர்களைக் கைதுசெய்வதில்லை.

திமிங்கிலங்களை விட்டுவிட்டு நெத்தலி மீன்களையே இந்த ஆளும்தரப்புப் பிடிக்கிறது. இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் நான் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். மற்றையவர்களான பிள்ளையான், வியாழேந்திரன் மற்றும் மேர்வின் சில்வா ஆகியோர் தோல்வியடைந்தவர்கள். அவர்களை விடுத்து வேறு அதிகாரம் கொண்ட எவரையும் கைது செய்ய முடியவில்லை.

இப்போது பட்டலந்த தொடர்பில் கதைக்கின்றனர். பதுளை பொரலந்தலவிலும் முகாமொன்று இருந்தது. அங்கு இருந்த ஆட்காட்டும்தலையாட்டிபொம்மையார்? இந்த ஆளும்தரப்பின் அமைச்சரே இருந்துள்ளார். பெரும் சித்திரவதைகளைச் செய்த முகாம் அது. அங்கு இருந்த தலையாட்டி பொம்மை தற்போது ஆளும்தரப்பில் இருக்கிறது.

அத்துடன் வரவு செலவு திட்டத்தில் மக்களுக்கு நிவாரண பொதி தொடர்பில் கூறினர். அதற்காக 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த பொதியைக் காணவில்லை. மக்களை ஏமாற்றுகின்றனர். தேர்தல் அறிவிக்கப்படும் என தெரிந்தே ஆளும்தரப்பு இவ்வாறு செயற்பட்டது. புத்தாண்டு முடிந்த பின்னர் அந்த நிவாரணப் பொதி மீண்டும் வழங்கப்படுவதில்லை. மீண்டும் மாகாணசபை தேர்தல் நெருங்கும்போது நிவாரண பொதியை வழங்க நடவடிக்கை எடுப்பார்கள்.

மக்கள் விடுதலை முன்னணிக்கு என்ன நடந்துள்ளது என எங்களுக்கே தெரியும். பட்டலந்தவால் நீங்களே பிரச்சினைகளை இழுத்துப் போட்டுக்கொண்டுள்ளீர்கள். இந்த ஆளும்தரப்பால் ரணில் விக்ரமசிங்க, மஹிந்த ராஜபக்ச மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோரை ஒன்றும் செய்ய முடியாது. முடியுமானால் கைது செய்து பாருங்கள்.

இந்த ஆளும்தரப்பு மக்கள் விடுதலை முன்னணியுடையது என்பதனை மறந்து அந்தக் கட்சிக்காக உயிர்த்தியாகம் செய்தவர்களை மறந்து புதிய பயணத்தையே மேற்கொள்கின்றது - என்றார்.

## சர்வ கட்சிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமான கட்டத்தில், நமது வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டின் நலன்களைப் பாதுகாக்கக் கூட்டாகச் செயல்படுவது அவசியம். இந்தச் சவால்களை எதிர்கொள்ளும்போது இலங்கையின் பொருளாதார மற்றும் இராஜதந்திர ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கு ஒருங்கிணைந்த பதிலை இந்த சூழ்நிலையின் தீவிரம் கோருகிறது - என்றார்.

அமெரிக்கஜனாதிபதிடொனால்ட்ட்ரம்பினால் 44 சதவீத வரி விதிக்கப்பட்டு, தற்போது இடை நிறுத்தப்பட்ட 90 நாள் அவகாசத்தில், பிரச்சினையை எதிர்கொள்வதற்குரிய ஆலோசனைகளை முன்வைக்க, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு ஆலோசனை குழு அமைக்கப்படும் என இன்றைய சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உறுதியாக அறிவித்துள்ளார் என்று மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

## குற்றச்சாட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அவருக்கு எதிராக எந்த குற்றச்சாட்டும் முன்வைக்காததால் கடந்த திங்கட்கிழமை குறித்த இளைஞனை நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது.

எந்தக் குற்றச்சாட்டும் இல்லாத அந்த இளைஞன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பயங்கரவாத தடுப்புபிரிவுக்குவந்துகைச்சாத்திட வேண்டுமென உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, குறித்த இளைஞன் பிணையில் விடுதலையாகி வீட்டுக்கு வரும்போது, அவர் பணிபுரிந்த தனியார் நிறுவனம் அவரைப் பணி நிறுத்தம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. பொலிஸாரின் பேச்சைக்கேட்டு ஜனாதிபதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அந்த இளைஞரைத் தடுத்துவைக்க கையெழுத்து வைத்ததன் விளைவுதான் இது. அந்த இளைஞனின் இளமை வாழ்க்கையே இப்போது கேள்விக்குள்ளாகி உள்ளது.

அதேபோன்று ஏறாவூரில் பலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்து கவிதை எழுதிய சிறுவன் ஒருவனை பொலிஸார் கைதுசெய்து விசாரணை நடத்தி இருக்கின்றனர். அதேபோன்று போராட்டம் ஒன்றை ஏற்பாடுசெய்த ஒருவின் வீட்டுக்கு சென்ற பொலிஸார் ஸ்டிகர் எங்கே எனக் கேட்கின்றனர்.

பயங்கரவாதத் தடுப்பு பிரிவுக்கு வாக்குமூலம் வழங்க சென்றவர்களிடம், இஸ்ரேல் பிரதமரை ஏன் பயங்கரவாதி என தெரிவிக்கிறீர்கள், பலஸ்தீனில் சிறுவர்கள் கொலை செய்யப்படுகவதற்கு இங்கு ஏன் போராட்டம் செய்ய வேண்டும் என பொலிஸார் கேட்டகின்றனர்.

நாடாளுமன்ற சபை முதல்வர் பலஸ்தீன் ஒத்துழைப்பு சங்கத்தின் தலைவராக இருக்கிறார். நான் பிரதித் தலைவர். நாங்கள் அனைவரும் பலஸ்தீனுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டம் மேற்கொண்டவர்கள். அவ்வாறு இருக்கும்போது பொலிஸாரின் என்ன பைத்தியகாரத்தனத்தில் ஈடுபடுகின்றனர்?

சுற்றுலா விசாவில் இஸ்ரேலியர்கள் நாட்டுக்கு வந்து சட்டவிராதேமான முறையில் இங்கு வியாபாரம் செய்கிறார்கள். இதற்கு எதிராக யாரையும் பொலிஸார் இதுவரை கைதுசெய்யவிOலலை. கொழும்பில் இஸ்ரேலின் இரண்டு கலாசார நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இது சட்டவிரோதம் என பிரதமர் தெரிவித்திருந்தார். ஆனால் தற்போதும் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்புடன் அந்த நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

சுற்றுலா விசாவில் நாட்டுக்கு வந்து வியாபாரம் செய்யும் ஒரு இஸ்ரேல் பிரஜையை பொலிஸார் இதுவரை கைது செய்திருக்கிறதா? ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்தோனேசியாவில் இருந்து சுற்றுலா விசாவில் வந்த சிலர் மத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து பொலிஸார் அவர்களை கைதுசெய்து 14 நாட்கள் தடுத்து வைத்திருந்தார்கள்.

இஸ்ரேல்காரர்களுக்கு ஆளும்தரப்பு ஏன் இந்தளவு பயப்படுகின்றது?. சட்டவிராதேமாக நடமாடும் இஸ்ரேல்காரர்களை கைதுசெய்வதில்லை. ஆனால் இஸ்ரேலுக்கு எதிராக ஸ்டிகர் ஒட்டியவர்களைக் கைதுசெய்கிறது. நாட்டை ஆட்சிசெய்த எந்த ஜனாதிபதிக்கு கீழும் இஸ்ரேலுக்கு எதிராக செயற்பட்டதற்கு இந்தளவு யாரும் நெருக்கடிக்கு ஆளாகவில்லை. ஆனால் பலஸ்தீனுக்கு ஆதரவளித்துவந்ததற்போதுள்ள ஆளும்தரப்பு 6 மாதங்களில் இவ்வாறு மாறி இருப்பது குறித்து கவலையடைகிறோம்.

சிலவேளை, ஆளும்தரப்பை அசௌகரியத்துக்குள்ளாக்க பொலிஸார் இவ்வாறு சதித்திட்டம் செய்கிறார்களோ தெரியாது. இது தொடர்பாகவும் ஆளும்தரப்புத் தேடிப்பார்க்க வேண்டும் என்றார்.

## அமெரிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை திருத்துவதற்கான யோசனையும்கூட ஜனாதிபதியிடம் முன்வைத்தேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள புதிய தீர்வை வரி தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நேற்று கூட்டப்பட்ட சர்வகட்சிக் கூட்டத்தின் நிறைவில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாடு உட்பட பல நாடுகள் மீது விதிக்கப்பட்ட வரியை அமெரிக்கா 90 நாட்களுக்கு இடைநிறுத்தியுள்ளது. மேற்கொண்டு ஏற்பட்டுள்ள அபாய நிலை குறித்தும் ஜனாதிபதியுடன் விரிவாகக் கலந்துரையாடினேன்

ஆடைத் துறையில் 350,000 நேரடி வேலை வாய்ப்புகளும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மறைமுகப் பயனாளிகளும் இருந்து வருகின்றனர். ஆடைத்துறையில் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 38 சதவீத பங்கு வகிக்கும்

தொடர்ச்சி 9ம் பக்கம்....



# உள்ளாட்சி தேர்தல் 2025

## பூஜை வழிபாடுகளுடன் வவுனியா நகரத்தில் பிரசாரத்தை ஆரம்பித்தது சுயேச்சைக் குழு

வவுனியா மாநகர சபையில் கோடாரி சின்னத்தில் போட்டியிடும் சுயேட்சைக் குழு -01 பூஜை வழிபாடுகளின் பின் நகரப் பகுதிக்கான தமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

வவுனியா, கந்தசாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளின் பின் புதன்கிழமை பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வவுனியா மாநகர சபை நகர கடைத் தொகுதி வட்டார வேட்பாளர் ஞா.பிரசாந், குடியிருப்பு வட்டார வேட்பாளர் சி.கிரிதரன் மற்றும் மாநகரசபையில் குறித்த சுயேச்சைக் குழு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த மாநகரசபை கடைத் தொகுதி வேட்பாளர், கடந்த காலங்களில் மக்கள் வாக்களித்தும் நான் உட்பட எமது மக்களுக்கு சபைகளால் எந்த நன்மையும் கிடைக்கவில்லை. கட்சிகளுக்கு அப்பால் சுயேச்சைகாக ஓர் இளம் வேட்பாளராக வவுனியா நகரில் களமிறங்கியுள்ளேன். மக்கள் தமது ஆதரவை எமது கோடாரி சின்னத்திற்கு தருவதன் மூலம் நீங்கள் எதிப்பார்க்கும் மாற்றத்தை எம்மால் ஏற்படுத்த முடியும் எனத் தெரிவித்தார். 100

## கிண்ணியா நகர சபைக்கான மக்கள் சந்திப்பும் பிரசாரமும்

(ஹலால் தீன்)

கிண்ணியா நகர சபையின், மாஞ்சோலைச் சேனை வட்டார தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் முஹம்மது பசாலின் தேர்தல் பிரசாரமும் மக்கள் சந்திப்பும் இன்று காலை 9.30 மணிக்கு மாஞ்சோலைச் சேனையில் இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஆநுஆ.ராபிக் கலந்து கொண்டு நகர சபையின் தேவைகளை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாகக் கருதுதெரிவித்தார்.

கிண்ணியா நகர சபையின், மாஞ்சோலைச் சேனை வட்டார வேட்பாளர் முஹம்மது பசால் தான் வெற்றி பெற்றால் என்ன செய்வேன் என்ற கருத்தையும் முன் வைத்தார்.

கிண்ணியா பிரதேசத்தில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் 8000 வாக்குகளை இந்த மக்கள் அளித்திருந்தார்கள்.

பொதுத்தேர்தலில் மூதூர் தொகுதி மக்கள் 24 ஆயிரம் வாக்குகளை இந்த மக்கள் அளித்திருந்தார்கள்.

இந்த உள்ளூராட்சி தேர்தலில் அதிக கூடுதல் வாக்களித்து மக்கள் சக்திக்கு வெற்றியை ஏற்படுத்துவார்கள்.

மாஞ்சோலை சேனை வட்டார வேட்பாளர் முகம்மது பசால் கூறும்போது -

இந்த வட்டாரத்தில் மக்களுடைய தேவைகள் அதிகமாககாணப்படுகின்றன.

வடிகால் பிரச்சினை மழை வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற பிரச்சினை இதற்கான தீர்வினை நான் பெற்றுக் கொடுப்பேன்.

நான் கண்ட அடிப்படை தேவைகளான இந்த விடயத்தில் எனது கவனத்தை கூடுதலாக செலுத்துவேன்.

டிபி ஜாயா வித்யாலய வீதியில் உள்ள வடிகானை முழுமையாக செய்து கொடுப்பேன் என தெரிவித்தார்.

## மக்களின் தேவைகளை உடன் பூர்த்தி செய்கின்ற சபையாக மாற்றி அமைப்போம்

### ஹசன் அலி தெரிவிப்பு

(றிபாஸ்)

மக்களின் நாளாந்த, அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு சபையாக சம்மாந்துறை பிரதேச சபையை மாற்றி அமைப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரும், சம்மாந்துறை தொகுதியின் பிரதம அமைப்பாளருமான ஹசன் அலி தெரிவித்தார்.

சம்மாந்துறை ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் குறிப்பிட்ட சில கட்சிகளுக்கு நீங்கள் வாக்களித்து ஏமாந்து, அலுத்து போயிருக்கின்ற இந்நிலையில்.

நாங்கள் உங்களிடத்தில் வந்திருப்பது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வது மாத்திரமல்ல இன, மத வேறுபாடுகளுக்கப்பால் ஏழை, எளிய மக்களின் வாழ்வாதார திட்டங்களையும் முன்னெடுக்க இருக்கின்றோம். அதற்காகத்தான் சபையை வென்று தாருங்கள் என்று கேட்கின்றோம்.

தேர்தல் பிரசாரப் பணியில் சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள சகல வீடுகளுக்கும் எங்களது வேட்பாளர்கள் செல்கின்ற போது அம்மக்களின் ஆதரவையும், அவர்கள் கூறுகின்ற விடயங்களையும் அவதானிக்கின்ற பொழுது ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் என்பதில் எவ்வித மாற்றுகருத்தும் கிடையாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சுவரொட்டிகள் குறைப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பரப்புரைகளின்போது சுவரொட்டிகளின் பயன்பாடு குறைக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கயான் ஜனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்திற்கு ஏற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் தவிர சுவரொட்டிகள் பயன்படுத்தப்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், வீடு வீடாகப் பிரசாரம் செய்தல், துண்டறிக்கைகளை விநியோகித்தல், செய்தித்தாள் மூலம்தகவல்களைவிநியோகித்தல், பொதுக் கூட்டங்கள் மற்றும் தன்னார்வப் பணிகள் மூலம் தேவையான விளம்பரம் செய்தல் என்று பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின்போது சுவரொட்டிகள் ஒட்டுவது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாடாக அமெரிக்கா மிகப்பெரிய ஏற்றுமதி மையமாக காணப்பட்டு வருகிறது. 28 சதவீத ஆடைகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், 13 சதவீதம் ஐக்கிய இராச்சியத்துக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

வர்த்தகம் குறித்த நிபுணத்துவ அறிவு கொண்ட குழுவொன்றை அவசரமாக அமெரிக்காவிற்கு அனுப்பி, சிறந்த கலந்துரையாடலைமுன்னெடுத்து,ஏற்றுக்கொள்ளத்தக்க சாதகமான முன்மொழி வுகளைச் சமர்ப்பிக்குமாறும்கேட்டுக்கொண்டேன். இங்கு பாதிக்கப்பட்டபிராந்தியநாடுகளுடன்மூலோபாய ரீதியாக கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுங்கள்.

இவ்வாறு நடத்தும் கருத்துப் பகிர்வுகள் மூலம் எழும் யோசனைகள் மற்றும் மூலோபாய முன்மொழிவுகள் தொடர்பில் சில அரசியல் இணக்கப்பாடுகளை ஏற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் நான் இங்கு சுட்டிக்காட்டினேன்.

எமது நாட்டிற்கு ஒப்பீட்டு ரீதியாக அனுகூலங்களைப் பெற்றுத் தரும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசித்தையும் இங்கு நான் சுட்டிக்காட்டினேன். எமது நாட்டில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்றை உருவாக்கி, மிகப்பெரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தலமாக இலங்கையை மாற்றுவதற்குமான யோசனைகளையும் இதன்போது முன்வைத்தேன்

தற்போது நமது நாட்டின் ஏற்றுமதி ஒருசில இடங்களுக்கு மட்டுமே நடந்த வருகின்றன. ஏற்பட்டுள்ள அபாயங்களை சுட்டிக்காட்டி, நமது நாட்டின் ஏற்றுமதி இலக்குகளை பன்முகப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இங்குசுட்டிக்காட்டினேன். மேலும், பசுமையை மையமாகக் கொண்ட ஏற்றுமதித் துறையை ஆரம்பிப்பதன் முக்கியத்துத்தினையும் இங்கு சுட்டிக்காட்டினேன்.

இந்த வரி விதிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நிறுவனாங்களுக்கு நிவாரணம் வழுங்க நிதியமொன்றை உருவாக்குவதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினேன். ஏற்றுமதிக்கு மதிப்பைக் கூட்டி அதிக பெறுமானத்தை வழங்கவேண்டும்.

ஐரோப்பியஒன்றியம்இலங்கைக்குமிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பங்குதாரராகும். ஜிஎஸ்பி பிளஸ் சலுகை நமது நாட்டிற்கு மிகப்பெரிய பக்க பலத்தை வழுங்குகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் 66 கட்டண வரிகளில் 85 சதவீதம் இந்த ஜி.எஸ்.பி.பிளஸ் பிரிவின் கீழ் வருகின்றன. நிபந்தனைகளோடு இந்தச் சலுகைகள் வழுங்கப்பட்டுள்ளதனால் நல்லாட்சியை முன்னெடுக்க வேண்டியதன் முக்கியத்தும், நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளல், ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையை வலுப்படுத்தும் என்பவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினேன்.

460 மில்லியன் டொலர் பெறுமதியான சந்தையுடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகளும் எமக்கு பெரும் பக்கபலத்தை வழங்கி வருகின்றன. எனவே இதனை நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்

ஐரோப்பியஒன்றியத்தின்நிபந்தனைகளை பூர்த்திசெய்யமுடியாவிட்டால், அந்தச்சந்தையும் இழக்கப்படலாம். இந்தப் பாரபட்சமான பொருளாதார சூழலால் உண்மையிலேயே பாதிக்கப்படுவதும், ஒடுக்கப்படுவதும் சாதாரண மக்கள்தான். ஆனபடியால், நாட்டின் உழைக்கும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வர்த்தகக் கொள்கையும் பொருளாதாரக் கொள்கையும் முகாமைத்துவம் செய்யப்படவேண்டும்

2028ஆம்ஆண்டில்வெளிநாட்டுக்கடனை அடைப்பதற்கு உயர் பொருளாதார வளர்ச்சி மற்றும்அரசவருமானம்பேணப்படவேண்டும் என்பதால்இது குறித்துக்கவனம்செலுத்துமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டேன். 2028ஆம்ஆண்டில்கடனை அடைக்க, 2025, 2026 மற்றும் 2027ஆம் ஆண்டுகளில் எமது நாடு அதிக பொருளாதார வளர்ச்சியையும் அரசவருவாயையும்பேண வேண்டியுள்ளன.

தற்போதைய சூழலில் வெளிநாட்டுக் கடனை அடைப்பது என்பது கடினமாக இருக்கும் என்பதால், 2033ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டுக் கடனை அடைக்க சர்வதேசநாணயநிதியத்துடன் மீண்டும்பேச்சு நடத்த வேண்டும். புதிய இணக்கப்பாட்டை எட்டவேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் தெரிவித்தேன்.

இந்த யோசனைகளையும், முன்மொழிவுகளையும் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் முன்வைத்தேன். இதன் மூலம் மக்கள் எதிர்பார்க்கும் வெற்றிகரமான பொருளாதார இலக்குகளை நாம் அடைய முடியும்என இங்கு மேலும் சுட்டிக்காட்டினேன் - என்றார்

# பெண்களுக்கிடையிலான வலய மட்ட கிரிக்கெட் கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரி சம்பியன்

(றிஸ்னாத்)

பெண்களுக்கிடையிலான வலய மட்ட கிரிக்கெட் இறுதிப்போட்டி புதன் கிழமை காலை 9 மணியளவில் கிண்ணியா ரேஞ்சர்ஸ் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.



இந்தப் போட்டியினை ஆரம்பிக்கும் முகமாக பிரதம விருந்தினராக வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி நளீம் மற்றும் பிரதிக்கல்விப்பணிப்பாளர் நப்ரி அவர்களும், உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் அரபாத் அவர்களினாலும் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

குறித்த போட்டியில் கிண்ணியா வலயத்திற்குட்பட்ட 14 பாடசாலை அணிகள் பங்குபற்றின. இப்போட்டியில் இறுதிப்போட்டிக்குகிண்ணியாஅல்ஹிரா மகா வித்தியாலயம் மற்றும் கிண்ணியா முஸ்லிம்மகளிர்வித்தியாலயபாடசாலை அணிகள் தெரிவுசெய்யப்பட்டன.

இந்த இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அல்-ஹிரா அணி 5 ஓவர்கள் நிறைவில் 61 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய முஸ்லிம் மகளிர் அணி 4 ஓவர்களை எதிர்கொண்டு 65 ஓட்டங்களைப்பெற்று8விக்கெட்டுகளால் முஸ்லிம் மகளிர் அணி வெற்றியைத் தனதாக்கிக்கொண்டனர்.

இறுதிப்போட்டியில் விளையாடிய குறித்த இரண்டு அணிகளும் மாகாண மட்டப்போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் அதிகளவான கிளீன் சிறிலங்கா திட்டம் முன்னெடுப்பு

(ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள ஹெல்த் சென்டருக்குச் சொந்தமான வளாகம் க்ளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் பூரணமாக புதன்கிழமை சுத்தம் செய்யப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி குழு தலைவரும் மற்றும் அரசியல் பேரவையின் உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவாவின் வேண்டுகோளுக்கு இணங்க, ஒவ்வொரு வேலைத்திட்டமும் அவர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்துக்கு முன்பாகவும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்திருக்கும் ஹெல்த் சென்டருக்குச் சொந்தமான இவ்வளாகத்தில், பல வருட காலமாக

குப்பைகள் நிரம்பியும் நுளம்புகள் தாக்கம் காரணமாகவும் மற்றும் பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுவதாலும் இவ்வளவினை சுத்தப்படுத்தித்தருமாறு பிரதேசமக்கள் ஆதம்பாவா எம்.பியிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து, கல்முனை மாநகர சபையினால் அவர்களது இயந்திரம் மூலமும் கல்முனை மாநகர சபை ஊழியர்களால் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு, வளாகம் பூரணமாக சுத்தப்படுத்தப்பட்டது.

நாட்டைச் சுத்தப்படுத்தும் இவ்வேலைத்திட்டத்தை ஆரம்பித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் இதற்காக முன்னின்று செயற்பட்டுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா உட்பட இதற்காகப் பாடுபட்ட அனைவருக்கும் பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.







# ‘கற்பகம்’ விற்பனை நிலையம் யாழ். தபாலகத்தில் திறப்பு

(சுபேசன்)

யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்தில் நேற்று (வியாழக்கிழமை) காலை கற்பகம் பனைசார் உற்பத்திகளின் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.




யாழ். மாவட்ட பிரதம தபாலகமும் – பனை அபிவிருத்திச்சபையும் இணைந்து முதற்தடவையாக இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன.

மேற்படி திறப்புவிழா நிகழ்வில் அஞ்சல் தலைமையக அஞ்சல்மா அதிபர் பிறேமச்சந்திர ஹேரத், வடமாகாண அஞ்சல்மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார், பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வி.சகாதேவன், யாழ் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அனுராதா பர்ணாந்து,

யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபர் திருமதி சாந்தகுமாரி மற்றும் பனை அபிவிருத்திச்சபையின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பா.சுதாகரன் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அரச வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் புதிய அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மேற்படி திட்டம் ஊடாக சிறிய அளவிலான பனைசார் விற்பனை மற்றும் உற்பத்தியாளர்கள் நன்மையடைய முடிவதுடன்–

ஏற்றுமதியாளர்களுக்குத்தேவையானமாதிரிகளை உரியதரநிர்ணயத்தோடுஉடனடியாகபெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தேசபந்து தென்னகோனுக்கு மாத்தறை நீதிமன்றம் பிணை

மாத்தறை வெலிகம பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் முன் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரி ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து கண்டி தும்பரை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், மாத்தறை நீதிவான் நீதிமன்றத்திற்கு நேற்று (வியாழக்கிழமை) அழைத்து வரப்பட்டார்.

இதன்போது பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பிணையில் விடுவிக்குமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

உ

முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# பங்குனி உத்திர திருவிழா

பங்குனி உத்திரம் என்பது தமிழ் பங்குனி மாதத்தில் (மார்ச்–ஏப்ரல்) உத்திரம் நட்சத்திரம் மற்றும் பௌர்ணமி சந்திக்கும் நாளாகும். 2025 ஆம் ஆண்டில், பங்குனி உத்திரம் ஏப்ரல் 11 அன்று (இன்று) சுப முகூர்த்தமாக கைகூடுகின்றது.

தெய்வீக புராணங்களின்படி, பங்குனி உத்திரம் அன்று நடைபெற்றதாக நம்பப்படும் தெய்வீக திருமணங்கள், இந்த நாளின் ஆன்மீக முக்கியத்துவத்தைப் பலமடங்காக உயர்த்துகின்றன. இந்நாள், இறைவனும் இறைவியும் ஒன்றிணையும் புனித தருணங்களின் நினைவாகும். இது, மனித உறவுகளின் பின்னணியில் தெய்வீக பிணைப்பு என்ற உன்னத அர்த்தத்தை நம் மனங்களில் பதிக்கும் நிகழ்வாக கருதப்படுகின்றது. இதனால், பங்குனி உத்திரம் திருநாள் என்பது குடும்ப உறவுகள், திருமணம் மற்றும் பாசத்திற்கான தெய்வீக விளக்கமாகவும், ஆன்மீக விழிப்புணர்வுக்கு வழிகாட்டியாகவும் விளங்குகிறது.

பங்குனிஉத்திர நாளில் முதன்மையாக நடந்ததாக கூறப்படும் திருமணம் சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் இடையே நிகழ்த்திய திருக்கயிலாய திருமணம் ஆகும். இது சமஸ்த உலகத்துக்கும், கல்யாண தர்மத்தின் தெய்வீக அடையாளமாக அமைந்தது. பார்வதியின் தவச்சக்தியால் கருணைமிகு சிவன், தன்னைப் பக்திக்கொடுத்து கொண்டவளாக இருந்த பார்வதியை திருமண பந்தத்தில் இணைத்தார் என கூறும் லிங்க புராணம், ஒரு ஆன்மா இறைவனுடன் ஒன்றிணையும் முக்தி நிலையை பிரதிபலிக்கிறது.

அதே நாளில் முருகப்பெருமான் தெய்வானையுடன் திருமணம் செய்ததாக ஸ்கந்த புராணம் கூறுகிறது. தேவசேனா இந்திரனின் மகளாக இருக்க, தேவர் சேனைகளுக்கு தலைவர் ஆன முருகனின் திருமணம், வானுலக வாழ்வின் தர்ம ஒழுங்கினை நிலைநிறுத்திய நிகழ்வாகச் சொல்லப்படுகிறது.

இந்த நாளில் ஆண்டாள் மற்றும் ஸ்ரீரங்கநாதரின் திருமணமும் நினைவுகூரப்படுகிறது. ஆண்டாள், வைணவத் திருமுறைகளில் மிகவும் முக்கியமான ஆழ்வார். இவர் தனது சிறு வயதிலேயே ஸ்ரீரங்கநாதனை மணமுடிக்க வேண்டுமென்ற கனவில் உறைந்து இருந்து, தனது பக்தியின் தீவிரத்தால், ஸ்ரீரங்கநாதரால் திருமணம் செய்தார் என்பது வரலாறு.

பங்குனி உத்திரத்துடன் தொடர்புடைய மற்றொரு தெய்வீக நிகழ்வு ஸ்ரீராமரும் சீதையும் திருமணம் செய்துகொண்ட தினம் என்கிறது ஐதீகம். இராமாயணத்தில் சிவ தனுஷை உடைத்து வெற்றி பெற்று, சீதையை மணந்த ராமர், தர்மமும் கற்பும் இணையும் வாழ்க்கையின் குறியீடாக விளங்கினார். பங்குனி உத்திரம், இந்த நிகழ்வை நினைவுபடுத்துவதன் மூலம், வாழ்வில் ஒழுக்கம், பொறுப்பு, பாசம் ஆகியவை எவ்வளவு முக்கியமானவை என்பதைக் கூறுகிறது.

இந்த நிகழ்வுகள் அனைத்தும், ஒவ்வொரு தம்பதியருக்கும் தங்கள் உறவை ஒரு தர்ம பந்தமாக, ஆன்மீக உறவாக சிந்திக்க வைக்கிறது. திருமணம் என்பது ஒரு உடல் பிணைப்பு அல்ல; அது இரு ஆன்மாக்கள் இறைவனின் சாட்சியுடன் இணைந்து தர்மவழியில் பயணிப்பதற்கான ஒப்பந்தம். இந்த உண்மையை புரியவைக்கும் நாளாகவே பங்குனி உத்திரம் விளங்குகிறது.

பங்குனி உத்திரம் திருநாளின் ஆன்மீக பெருமை, தமிழ்நாட்டின் பெரும்பாலான திருக்கோயில்களில் நடைபெறும் திருக்கல்யாண விழாக்கள் மூலம் வெளிப்படுகிறது. மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், பங்குனி உத்திரத்தைக் கொண்டாடும் முக்கிய தலங்களில் ஒன்றாகும். இந்த கோயிலில், மீனாட்சி அம்மனும் சுந்தரேஸ்வரரும் பங்குனி உத்திர நாளில் திருமணம் செய்யும் நிகழ்வு மிகுந்த ஆனந்தத்துடன், கலாசார–பாரம்பரிய மகத்துவத்துடன் நடைபெறுகிறது. பத்து நாட்கள் நீளும் திருவிழாவில், பங்குனி உத்திரம் அன்று திருக்கல்யாணம் நடைபெறும் போது, ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசன பாக்கியம் பெறுகிறார்கள்.

சிதம்பரத்தில் உள்ள நடராஜர் கோயிலும், இந்த நாளை சிறப்பாகக் கொண்டாடும் பிரசித்தி பெற்ற தலமாகும். இங்கு சிவபெருமான் சிவகாமி அம்பாளுடன் திருக்கல்யாண உறவினை ஏற்படுத்தும் நினைவாக சிறப்பு வழிபாடுகள், நடன பூஜைகள், தீப ஆராதனைகள், மற்றும் வேத பாராயணங்கள் நடைபெறுகின்றன. தில்லை சிதம்பரம், தியானம், ஆன்ம சுத்தி, மற்றும் பரமாத்மாவுடன் சேர்ந்த ஒளிக்கேந்திரமாகவும் கருதப்படுகிறது. பங்குனி உத்திரம் அன்று, அங்கு திருக்கல்யாணம் கண்டு தரிசிப்பது என்பது பக்தர்களுக்கு மன அமைதி, ஆனந்தம், மற்றும் இறை அருளின் நெருக்கத்தை தரும் ஒரு உன்னத அனுபவமாக அமைகிறது.

திருப்பரங்குன்றம், பழனி, திருச்செந்தூர் போன்ற முருகன் தலங்களில், பங்குனி உத்திரத்தன்று முருகப்பெருமானுக்கும் தெய்வையானைக்கும் திருக்கல்யாண தரிசனம் நடைபெறும். பக்தர்கள் வேறு மாநிலங்களிலிருந்தும் கூட வந்து, கவடி எடுத்துச் சென்று, நேர்த்திக்கடன்களை செலுத்தி, முருகனின் திருவருளைப் பெற இந்நாளில் விழைவார்கள்.

ஸ்ரீரங்கம் கோயிலில் ஆண்டாள் கல்யாணம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆண்டாள் கல்யாண ஊர்வலத்தில், ஸ்ரீரங்கநாதரும் ஆண்டாளும் பூமாலை மாற்றிக்கொண்டு, புண்ணிய பூமியில் பரமபாதத்துக்கேற்ற ஆனந்த கல்யாணம் நிகழ்த்துகிறார்கள் என பக்தர்கள் நம்புகின்றனர். பக்தி என்பது இறைவனுடன் உறவாக்கும் தூய்மை பாசம் என்பதை ஆண்டாள் நிகழ்வு முழுமையாக வெளிக்கொள்கிறது.

இலங்கையிலும் பல ஆலயங்களில் பங்குனி உத்திரம் அன்று விசேட பூஜைகள் வழிபாடுகள் நடைபெறுவது வழக்கம். இவ்வருடம் சிறப்பாக முருகனுக்கு உகந்த மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவிலின் கும்பாபிஷேகம் நடைபெறுவதும், யாழ்ப்பாண கந்த புராண கலாச்சார அடையாளமான நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வழமை போல இம்முறையும் காலையில் விஷேட வழிபாடுகள் இடம்பெறுவதும், முருக வழிபாட்டின் தொன்மை மற்றும் பங்குனி உத்திர திருநாள் மகத்துவத்தை உணர்த்துகின்றது.

பங்குனி உத்திரம் திருநாளில், பக்தர்கள் மேற்கொள்ளும் விரதங்களும், எடுத்துச் செல்லப்படும் கவடியும், செலுத்தப்படும் நேர்த்திக்கடன்களும் இறைவனிடம் ஒருவனது உடல், மனம், உயிர் மூன்றையும் அர்ப்பணிக்கின்ற ஆன்மீக நெறியின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. இவை புறச்சடங்குகளாக மட்டும் இல்லாமல், பரிசுத்தத்திற்கும் தியான நிலைக்கும் வழிகாட்டும் ஆன்மீக சாதனைகளாக விளங்குகின்றன.

பங்குனி உத்திரம் என்பது திருமண வாழ்க்கையில் சமாதானம் வேண்டுபவர்களுக்கு, நல்ல வாழ்க்கைத்துணை நாடுபவர்களுக்கு, அல்லது தம்பதிய உறவுகளில் மதிப்பும் ஒற்றுமையும் நிலவ வேண்டுபவர்களுக்கு, மிக முக்கியமான ஒரு வழிபாட்டு நாளாகக் கருதப்படுகிறது. இந்நாளில், பக்தர்கள் சீரான விரத முறைகளை மேற்கொண்டு, மாலை தரித்து, சிவபெருமானோ, முருகப்பெருமானோ, அல்லது விஷ்ணுவோடு தம்மை ஒருங்கிணைக்க நினைவுறுத்தும் வழிபாடுகளில் ஈடுபடுவர்.

இந்த நாளில் அதிக முக்கியத்துவம் பெறுவது கவடி எடுக்கும் வழிபாடு ஆகும். பக்தர்கள் தம்முடைய மன ஒழுக்கத்தை, உடல் ஒழுங்கை, சமயக்கட்டுப்பாடுகளைக்கடைப்பிடிக்கின்ற செயலாகவும், தமது வேண்டுகோளுக்கான நேர்த்தியாகவும் இக்காவடியினை சுமந்து பங்குனி உத்திரம் அன்று முருகனை வேண்டுவார்கள். காவடி சுமப்பது என்பது ஒரு தூய்மையான பயணம். ஒவ்வொரு அடியிலும், இறைவனின் திருவருளைக் கற்பிக்கிறது. தவம் போலவே, இந்த பயணம் மனநிலையை சீராக்கி, இறைவனிடம் உள்ள பக்தியை தீவிரமாக மாற்றும். இது துறவிகளுக்கான வழியல்ல; சாதாரண வாழ்க்கை நடத்தும் நாமும், இந்த விரத வழிகளைப் பின்பற்றி, தெய்வத்தின் அருள் பொழியும் வாய்ப்பை பெறலாம் என்பதே அதன் அடிப்படை ஆகும்.

அதேபோல், நேர்த்திக்கடன் செலுத்தும் வழிபாடும் பங்குனி உத்திரத்துடன் இணைந்திருக்கும். பக்தர்கள், தாங்கள் பிரார்த்தித்த வேண்டுதலுக்கான நிவாரணமாக, கோயில்களுக்கு தீபம் ஏற்றுதல், நெய்வேதியம் சமர்ப்பித்தல், அன்னதானம், பஜனை நடத்துதல் போன்ற வழிகளால் நேர்த்தியை செலுத்துவர். இது ஒவ்வொருவரின் உள்ளுணர்வை வெளிப்படுத்தும் புனித செயல் என்பதுடன் இந்நிகழ்வுகள் இறைவனிடம் நாம் கொண்டுள்ள நம்பிக்கை, ஒருவர் தன்னுள்ளமை, மன ஒடுக்கம் மற்றும் இறைபாசத்தின் வெளிப்பாடாகும்.

உண்மையில் விரதம் என்பது வெறும் உணவு தவிர்ப்பும் அல்ல; அது வாழ்க்கையின் அனைத்து இச்சைகளையும் கட்டுப்படுத்தும் பயிற்சி. பங்குனி உத்திரத்தில் மேற்கொள்ளப்படும் விரதங்களில், ஒழுக்கம், மன அமைதி , பக்தி என்பவற்றின் அடிப்படையில் அமைகின்றது. பக்தர்கள் வழக்கமாக தங்களை துன்புறுத்தும் உணவுகளிலிருந்து விலகி, தியானத்தில் ஈடுபட்டு, வெறும் அரை உணவோ, பசிப்போன உணவோ எடுத்துக்கொண்டு, இறைவனை நினைத்து சிந்திப்பதையே விரதமாக பின்பற்றுவர்.

இதனுடன் பஜனை, திருமுறை, தேவாரம் போன்ற பராயணங்களும் இணையும்போது பங்குனி உத்திர வழிபாடுகள் மேலும் இறை நிலைக்கு பக்தர்களை இட்டு செல்கின்றது.

இச்செயல்பாடுகள் மனதைத் தூய்மைப்படுத்துவதோடு, மன அழுத்தத்தை நீக்கி, இறை அருளில் ஒன்றிணையும் பரவசத்தை தருகின்றன.

பங்குனி உத்திரம் திருநாளை ஆன்மீக ரீதியில் நமக்குள் ஆழமாகப் புரிந்துகொள்ள விரும்பினால், இந்த நாளின் ஒரு மறைவான ஆனால் முக்கியமான நிகழ்வான காமதேவனின் அழிவும், அதனைத் தொடர்ந்து நிகழும் சிவபார்வதி கல்யாணமும் நம்மை ஆழ்ந்த சிந்தனைக்கு அழைத்துச் செல்கிறது. இது, ஆசைகளும், தவமும், தெய்வீக அருளும் ஒன்றிணையும் விஸ்மய நிகழ்வாகவும், ஒவ்வொரு ஆன்மீக பயணிக்கும் வாழ்வில் நிகழ வேண்டிய உணர்வுப்பூர்வமான தருணமாகவும் அமைகிறது.

புராணக் கதைகளின்படி, பரமசிவன் கடுமையான தியானத்தில் ஈடுபட்டு கொண்டிருந்தபோது, உலக அமைதி மீண்டும் நிலைபெற வேண்டும் என்பதற்காக தேவர்கள், காமதேவனை அனுப்பினர். காமதேவன், தனது மலர் அம்பினால் சிவனின் தியானத்தை கலைக்க முயலவே,சிவபெருமான், தனது மூன்றாவது கணால், காமனை சாம்பலாக்குகிறார். இது நமக்கு சொல்லும் உண்மை என்னவென்றால், இச்சை அல்லது காமம் என்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றல்ல, ஆனால் அது கட்டுப்பாடற்றதாக இருந்தால், அது மனதையும் ஆன்மாவையும் சிதைக்கும். ஆனால் அதே ஆசை, தர்மத்தின் வழியில் செலுத்தப்பட்டால், அது தெய்வீக பாசமாக மாற்றப்படலாம். இது தான் பங்குனி உத்திரத்தின் உள்ளார்ந்த தத்துவம். ஆசையை அழிக்க வேண்டிய அவசியமில்லை; அது சீர்படுத்தப்பட வேண்டும், அதிலிருந்து ஆன்மா விடுதலை அடைய வேண்டும்.

சிவபெருமான் பின்னர் பார்வதியின் தவச்சக்தியால் கருணையுடன் இசைந்து, பார்வதியை திருமணம் செய்கிறார். இங்கே தவம் என்பது ஒரு ஆன்மாவின் அதி உன்னத சாதனை என பொருள் படுகின்றது.

இன்றைய உலகம், நவீன வாழ்க்கை முறைகளாலும், வேகமான சிந்தனைகளாலும், சுயநலத்தாலும் ஆழ்ந்த எதிர்மறைத் தாக்கங்களை சந்தித்து வருகிறது. குடும்ப உறவுகள் பலவீனமாகி வருகின்றன; திருமண வாழ்க்கைகள் கலங்குகின்றன; உறவுகளுக்கிடையேயான நம்பிக்கையும், அர்ப்பணமும் குறைந்து வருகின்றன. மன அழுத்தம், தனிமை, மற்றும் ஆழமற்ற வாழ்க்கைத் தொடர்புகள் நம் அன்றாட அனுபவங்களாக மாறி விட்டுள்ளன. உண்மையை சொல்லப்போனால் இன்று நம்மைச் சூழ்ந்துள்ள உலகத்தில், ஆசைகளும் விபரீத தூண்டுதல்களும் கட்டுப்பாடின்றி ஓடிக்கொண்டு இருக்கின்றன. அந்த வேகத்தை நம்முள் சமநிலை ஏற்பட வேண்டுமானால், இத்தகைய திருநாள்கள் தொடர்பான அறிவும் இறை சிந்தனையும் தேவை. பங்குனி உத்திரம் இத்தகய தத்துவத்தையே நம் உள்ளங்களில் புதுப்பிக்கிறது. அது, இச்சையின் சலனத்தையும், தவத்தின் அமைதியையும், அருளின் அமைப்பையும் ஒரே நேரத்தில் எமக்கு வெளிப்படுத்தும் புனித நாளாக அமைகின்றது. இந்த நன்னாள் நம்மை நம் சொந்த சூழல்களில் இருந்து வெளியே எடுத்து, ஆழமான உள் பார்வைக்கு அழைக்கும் ஒரு தெய்வீக நாளாக அமைகின்றது.

விரதவழிபாடுகளும், தன்னலமற்ற தரிசன அனுபவங்களும், ஒழுக்க வழிபாடுகளும் பங்குனி உத்திர தினம் அன்று நமக்கு பக்தியின் கோட்பாடுகளை விளக்குகின்றது. பக்தி என்பது வாழ்வின் ஒவ்வொரு செயலும் இறைவனிடம் நிகர்த்துக்கொள்கிற துணிச்சலாக செயலாக இருக்க, இந்த நாளின் வழிபாடுகள், நம்முள் உள்ள எச்சமில்லாத பாசத்தையும், அறநெறியையும், மனநிறைவையும் வளர்க்கின்றன. அதனால், பங்குனி உத்திரத்தை இன்று நாம் பக்தி சிரத்தையுடன் அனுட்டானிக்கும் போது, நாம் ஒரு ஆன்மீக நெறியை அனுபவிக்கிறோம். அது எம்முள் ஒரு உள் பயணத்துக்கான வாசல் திறக்கப்பட காரணமாக அமைவதுடன் அந்த விசாரணையின் அடிப்படையில் நம்முடைய வாழ்க்கை நெறி ஒழுங்கு பெறவும் நம்முள் சாந்தி நிலைக்கவும் வழி வகுக்கும் என்பதில் ஒரு சந்தேகமும் இல்லை.

பங்குனி உத்திர தினமான இன்று நல்லூர் கந்தப்பெருமானின் திருவருளும் வழிகாட்டுதலும் இணையப் பெற்று யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வெளிப்புறத்தில் அமைய இருக்கும் நல்லூரான் தெற்கு வாசல் வளைவுக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு காலை 6 மணிக்கு இடம்பெறுவதும் இப்புனித நன்னாளின் சிறப்பை இன்னும் ஒளிமய மாக்குகின்றது.

ஜமுனாராணி சிவலோகநாதன்

# முன்பள்ளிகளை ஒருங்கிணைத்து தேசியகொள்கையை ஏற்படுத்துக

## அம்பாறை மாவட்ட எம்.பி. உதுமாலெப்பை கோரிக்கை

(ஹமீட்)

நமது நாட்டில் 09 மாகாணங்களில் இயங்கி வரும் முன்பள்ளி பணியகங்களை ஒன்றிணைத்து தேசிய கொள்கை ஒன்றை உருவாக்கி செயற்படுத்துமாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்எம்.எஸ்.உதுமாலெப்பை மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற கட்டடத்தில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் திருமதி சரோஜா போல்ராஜ் தலைமையில் நடைபெற்ற போது கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் -

முன்பள்ளி கல்வியினை ஒழுங்குபடுத்தி நமது மாணவர்களின் ஆரம்ப கல்வித் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படவேண்டும். முன்பள்ளிபணியகங்களுக்குமாகாணமட்டத்தில் தவிசாளர் - முகாமைத்துவப் பணிப்பாளர்கள் பதவிகளுக்கு நியமனங்கள் மேற்கொள்கின்ற போது கல்வித்துறையினை சேர்ந்தவர்களுக்கே நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும்.

கிழக்கு மாகாண சபையில் 2 தடவைகள் அமைச்சராக நான் பதவி வகித்த காலத்தில் கிழக்கு மாகாண முன்பள்ளித் துறைக்கு முடிந்தளவு பணி செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டு வருகிறது. அர்ப்பணிப்புடன் நமது மாணவர்களுக்கான ஆரம்ப கல்வித்துறைக்கு பணி புரியும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவவை அதிகரித்து நமது நாட்டில் முன்பள்ளித் துறைக்கு பணி புரியும் ஆசிரியர்களுக்காக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கிழக்குமாகாணமுன்பள்ளிபணியகத்தில்கடந்த 14 வருட காலமாக கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வுகள் இது வரையும் வழங்கப்படாமலுள்ளது. 2023 இல் நடைபெற்ற ஈ.பி. பரீட்சையின் முடிவுகள் இது வரையும் வெளியாகாமல் உள்ளன. எனவே இவர்களுக்கான பதவி உயர்வுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ள வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பையுடைய கோரிக்கைக்கு பதிலளித்த சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சர் திருமதி சரோஜா போல்ராஜ் நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை அவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதாகவும், எதிர்காலத்தில் 09 மாகாண சபைகளில் இயங்கி வரும் முன்பள்ளி பணியகங்களை ஒன்றிணைத்து ஒரு கல்வித் திட்டத்தைசெயற்படுத்துவதற்கானஏற்பாடுகளை சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சும், கல்வி அமைச்சும் இணைந்து முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை -

அண்மையில் நாடாளுமன்றத்தில் எமது முஸ்லிம் சமூகம் தொடர்பாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் திருமதி சரோஜா போல்ராஜ் அவர்கள் முஸ்லிம்களின் குழந்தை திருமணம் அனுமதிக்கப்பட்ட முஸ்லிம் விவாக , விவாகரத்து சட்டத்தை மாற்ற இலங்கை அரசு ஆலோசனை செய்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையிடம் உறுதி வழங்கியதாக வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாக முஸ்லிம் சமூகத்தின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இந்த விடயத்தை நாடாளுமன்றத்தில் உங்களிடம் ஒத்தி வைத்தேன்.

இதற்கு பதிலளித்த அமைச்சராகிய நீங்கள் முஸ்லிம் சமூகத்தின் குழந்தை திருமணம் தொடர்பாக எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை என மறுத்ததுடன், இது தொடர்பாக செய்தி வெளியிட்ட டெய்லி சிலோனுக்கு எதிராக தான் சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாக தெரிவித்தீர்கள். இது வரை இது சம்பந்தமாக ஏதாவது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா? என்ற விவரங்களை இந்த அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டதுடன், தாங்கள் சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சராக இருந்து செய்து வரும் நல்ல பணிகளை வரவேற்கிறோம். உங்களுக்கும் எங்களுக்கும் எந்த ஒரு தனிப்பட்ட பிரச்சினையுமே கிடையாது என்பதனை அமைச்சரும், அமைச்சின் அதிகாரிகளும் புரிந்து கொள்ள வேண்டும். சிலர் அரசியல் நோக்கங்களுக்காக சில தவறான கருத்துக்களை நாடாளுமன்றத்தில் தெரிவித்து வருவது கவலைக்குரிய விடயமாகும் எனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சரோஜா போல்ராஜ் அவர்கள் தான் முஸ்லிம் சமூகத்தின் குழந்தை திருமணம் சட்டம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை எனவும் டெய்லி சிலோனினால் வெளியிடப்பட்ட தவறான செய்திக்கெதிராக தமது அமைச்சு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.




# பிளாஸ்டிக் போத்தல்களை மீள்சுழற்சிக்கு சேகரித்த கொத்மலைப் பிரதேச சபை

(கேதீஸ்)

கொத்மலைபிரதேசசபைக்குட்பட்டபல்வேறுஇடங்களில் சட்டவிரோதமாக சுற்றுச்சூழலில் கொட்டப்பட்டிருந்த ஏராளமான பிளாஸ்டிக் போத்தல்களை சேகரித்து, மீள்சுழற்சி செய்வதற்காக தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க கொத்மலை பிரதேச சபை அண்மையில் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுற்றுச்சூழலில் கொட்டப்பட்ட இந்த பிளாஸ்டிக் போத்தல்கள் பிரதேச சபையின் சுகாதாரத் துறை ஊழியர்களால் சேகரிக்கப்பட்டு பூண்டுலோயா, ஹெரோ தோட்டத்தில் அமைந்துள்ள குப்பைத் தொட்டியில் வைக்கப்பட்டன.

கழிவுகளை சட்டவிரோதமாக சுற்றுச் சூழலுக்குள் கொட்டுவதைத் தவிர்த்து, சரியான முறையில் அகற்றுவதன் மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு பங்களிக்குமாறு கொத்மலை பிரதேசசபை பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.



# அரபுக் கல்லூரி ஆசிரியர்களுக்கு பயிற்சி நிலையம்; ஹிஸ்புல்லாஹ்வின் கேள்விக்கு சாதகமான பதில்

(சினீஸ் கான்)



அரபுக்கல்லூரிகள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களில் சேவையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் இமாம்களுக்கு பயிற்சி நிலையம் இல்லை. எதிர்காலத்தில் இவர்களுக்கு முறையான பயிற்சி வழங்குவதற்கான பயிற்சி மத்தியநிலையம்அமைப்பதற்கு எதிர்பார்க்கிறோம் என புத்தசாசன, சமய, மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் எம்பி தனது கேள்வியில், முஸ்லிம் சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்துள்ள அரபுக்கல்லூரிகளில்சேவையாற்றும்ஆசிரியர்களுக்கும் முஸ்லிம் பள்ளிவாசல்களில் சேவையாற்றும் இமாம்களுக்கும் முஅத்தின்களுக்கும் முறையான பயிற்சியைப்பெற்றுக்கொள்வதற்கான பயிற்சி நிலையம் இல்லாமையால் அவர்களின் சேவையை முறையாக மேற்கொள்ளத் தேவையான பயிற்சியினை பெற்றுக்கொள்ள இயலாமலுள்ளது.

அதனால் அரபுக்கல்லூரிகள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களில்சேவையாற்றும்ஆசிரியர்கள்மற்றும் இமாம்களுக்குமுறையானபயிற்சியைவழங்குவதற்கான பயிற்சி நிலையமொன்றை அமைப்பதற்கு நடடிக்கை மேற்கொள்ளுமா எனக்கேட்கிறேன்?

இதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் –

அரபுக்கல்லூரிகள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களில் சேவையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் இமாம்களுக்கு பயிற்சி நிலையம் என ஒன்று இல்லை. இவ்வாறு முறையான பயிற்சி நிலையம் இல்லாவிட்டாலும் அரபுக்கல்லூரிகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்காக முஸ்லிம் சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களமூடாக வருடாந்தம் பல்வேறு பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேநேரம், அரபுக்கல்லூரிகளுக்கான புதிய பாடத்திட்டம் தற்போது திருத்தப்பட்டு வருகிறது. அது அனுமதிக்கப்பட்ட பின்னர் இப்பயிற்சிப்பாதை எமது கல்விவரைபுக்குள்முறையாகஇணைத்துக்கொள்வதற்கு திட்டமிட்டிருக்கிறோம். இந்த பாடத்திட்டம் தற்போது கல்வி அமைச்சில் இறுதி கட்டத்தில் இருக்கிறது.

அதேபோன்று முஸ்லிம் பள்ளிவாசல்களில் சேவையாற்றும்இமாம்கள்மற்றும்முஅத்தின்களுக்கும் பயிற்சி நிலையம் ஒன்று இல்லை. அவ்வாறு இல்லாவிட்டாலும் குறித்த இமாம்கள் கல்வி கற்ற அரபு கல்லூரிகளில் தேவையான பயிற்சியை வழங்கிய பின்னர், இமாம்களை பள்ளிவாசல்களுக்கு இணைத்துக்கொள்வதன் மூலம் அவர்களுக்கு அவர்களின் கடமை பொறுப்பை மேற்கொள்ள சில பயிற்சிகள் கிடைக்கப்பெற்று வருகின்றன என்பதே எமது கருத்து.

புதியபாடத்திட்டம்அறிமுகப்படுத்தப்படுவதன்மூலம் எதிர்காலத்தில் அரபு கல்லூரிகளின் கல்வித்துறையை முன்னேற்றுவதற்காக ஆசிரியர்களுக்கு மிகவும் ஆரோக்கியமான பயிற்சியை வழக்குவதே எமது எதிர்பார்ப்பு. இதன்போது தற்போது மேற்கொள்ளப்படும் வருடாந்த பயிற்சி வேலைத்திட்டத்துக்கு மேலதிகமாக அவர்களுக்கு பயிற்சி மத்திய நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பில் எனது விசேட கவனம் செலுத்தப்படும். – என்றார்.



# வருமுன் நடவடிக்கை மேற்கொள்வதே சிறந்தது தையிட்டி விகாரை தொடர்பாக பிரகாஷ் கருத்து

தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுவிட்டது. அது உண்மையில் சட்டவிரோதமான ஒரு கட்டடம்தான். அதில் மாற்றுக்கருத்து ஏதும் கிடையாது. ஆனால், அதற்கான போராட்டம் என்பது கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் போன்றதே. கண் கெடமுன் சுதாகரித்து பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அதியுயர் பாதுகாப்பு வலயமாகத் தையிட்டி இருந்தபோது இரவோடு இஷ்வாகக் கட்டிமுடிக்கப்பட்டது.

- இவ்வாறு உடுவிலில், உடுவில் வட்டார வேட்பாளர் துவாரகனை ஆதரித்துக் கருத்துத் தெரிவிக்கையில் வலி.தெற்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் தி.பிரகாஸ் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

2011 ஆம் ஆண்டு நான் வலி.தெற்குப் பிரதேசசபைக்கு முதன்முதலாக விகிதாசாரத் தேர்தலில் அதிகப் பெரும்பாள்மை வாக்குகள் பெற்று சபையின் தவிசாளராக மக்களால் தெரிவுசெய்யப்பட்டேன். தற்போது வட்டாரத் தேர்தல் என்றதால் கட்சிதான் தவிசாளரைத் தெரிவுசெய்யும். அங்கு தெரிவாகிய உறுப்பினர்களின் வாக்களிப்பினால் - அவர்கள் மணங்களை வென்றவரே தவிசாளராகத் தெரிவாகுவார். 2011 ஆம் ஆண்டு நிலைமை அவ்வாறு அல்ல. முழு வலி.தெற்கு பிரதேசசபை மக்களும் அவர்களின் வாக்குகளால் அதிக வாக்கு பெற்றவரே தவிசாளராகத் தெரிவாகுவார். என்னை நம்பி மக்கள் வாக்களித்து தெரிவுசெய்தார்கள். மொத்தமாக 16 உறுப்பினர்களின் 13 உறுப்பினர்கள் எமது கட்சி சார்ந்தவர்கள் தெரிவானார்கள். மற்றைய மூவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சார்ந்தவர்கள்.

அந்த நேரத்தில் சுன்னாகம் பஸ் தரிப்பு நிலையத்தில் சந்தியின் மையப் பகுதியில் அரச மரம் ஒன்றின் கீழே புத்தர் சிலை வைக்கப்பட்டு இராணுவம் மற்றும் பொலிஸாரால் வழிபாடியற்றப்பட்டது. அந்தநேரம் அதற்கு அருகில் இராணுவக் காவலரணும் இருந்தது.

நான் தவிசாளராக வந்த ஆரம்பக் காலப்பகுதி அது. அந்தப் புத்தர் சிலை இருக்கின்றமையால் அந்தப் பிரதேச மக்கள் மத்தியில் பதற்றநிலை காணப்பட்டது. அந்த நேரத்தில் ஆளுநராக இருந்தவர் மேஜர்ஜெனரல்சந்திரசிறி. கிட்டத்தட்ட வடக்கில் இராணுவ ஆட்சி நிகழ்ந்த காலம் அது. பஸ்தரிப்பு நிலையம் விஸ்தரிப்பு என்ற போர்வையில் அந்த அரச மரத்தையும் மெல்ல அகற்றி அங்கிருந்த புத்தர் சிலையையும் ஒரேநாளில் அகற்றினேன்.



இல்லாவிட்டால் இன்று சுன்னாகம் பஸ் நிலையத்தில் தையிட்டி போன்று பலர் அரசியலுக்காக ஆர்ப்பாட்டம் நடந்தியிருப்பார்கள். அதை இல்லாமல் அகற்றி எமது பிரதேச மக்களுக்கு நடக்க இருந்த போராபத்தைத் தடுத்தவர்கள் நாங்கள் என்பதை இங்குள்ள பெரியவர்கள் நன்கு அறிவார்கள்.

இவ்வாறுசரியான திட்டமிடலுடன்; கூடிய அபிவிருத்திக்கு எமது பிரதேசத்தை நாமே ஆள்வதற்கு மீண்டும் உங்கள் ஆணை வேண்டி நிற்கின்றோம். நாங்கள் புதியவர்கள் அல்லர். அதைச் செய்வோம் இதைச்செய்வோம் என்று பகட்டுக்கு செய்பவர்களும் அல்லர். செய்து காட்டிவிட்டு உங்கள் ஆணைக்காக தமிழன் என்ற உணர்வோடு தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்ட தமிழரசுக்கு வாக்களிக்குமாறு வேண்டுகிறோம். - என்றார்.

# இனநல்லிணக்க சாரணர் பயிற்சிப் பாசறை விரைவில்

(றிபாஸ்)

அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் வருடாந்த சாரணர் ஒன்று கூடலும், பயிற்சி பாசறையும் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெப்பை தலைமையில் எதிர்வரும் 18, 19, 20 ஆம் திகதிளில் நடைபெறவுள்ள இப்பயிற்சி பாசறைக்கு மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலுமிருந்து நூற்றுக்கணக்கான ஆண், பெண் சாரணர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெறவுள்ளனர்.

மூன்று நாள்களாக நடைபெறவுள்ள இப்பயிற்சி பாசறையில் தமிழ், முஸ்லிம், சிங்கள சாரணர்கள் ஒன்றாக தங்கியிருந்து. இன நல்லிணக்கம், புரிந்துணர்வு, பரஸ்பரம், ஒற்றுமை, சகோதரத்துவம் ஏற்படுவதற்கு இப்பயிற்சி பாசறை வழிவகுக்குமென ஊடகத்துக்கு பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளர் எம்.எப். றிபாஸ் தெரிவித் துள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.04.2025இல் வெளியிடப்பெற்றது